நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழிச் சமூகமாக்கம்

(Language socialization of urban and rural students)

பேராசிரியர் இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

(முன்னாள் பேராசிரியர் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)

அமிர்தாப் பல்கலைக்கழகம்

கோயம்பத்தூர்

rajushush@gmail.com

முன்னுரை

இதுவரை நான் மொழியியியல் குறித்து எழுதியவைகளைத் திருத்தி வெளியிடுவதற்கு எனக்கு காலமும் இல்லை நிதியும் இல்லை. மொழியியல் குழந்தை தமிழ்நாட்டில் பிறந்து வளர இயலாமல் இறந்து விட்டது. பேராசிரியர் தெய்வ சுந்தரம் போன்றோர் அதன் வாழ்வுக்கு வேண்டிப் போராடினாலும் அது வெற்றியடையும் சூழல் தற்போது தமிழ்நாட்டில் இல்லை. மொழியியலின் முக்கியதுவம் சரியாக கவனக்குவிப்பு செய்யப்படவில்லை. மொழியியல் காழ்ப்புணர்ச்சியுடன் அணுகப்படுகின்றது. தமிழ்ப் பல்கலைக்கழத்தில் நான் பணியாற்றிய போது மொழியியலைத் தமிழில் படித்த எனது மாணவகளுக்காக நான் எழுதிய ஏடுகளும் பிற கட்டுரைகளும் எனது மடிக்கணினியில் குப்பைகளாகச் சேர்ந்துள்ளன. இம்மொழியியல் குப்பைகளை எனது மடிக்கணினியிலிருந்து வெளியேற்றும் காலகட்டம் வந்துவிட்டதை உணர்ந்து, அக்குப்பைகளில் ஒன்றை இங்கு தந்துள்ளேன். இது தேவையற்றது என்று எனக்குத் தெரியும். குப்பைகளைக் களைய இருக்கவே இருக்கிறது இணையம்.

இராசேந்திரன் சங்கரவேலாயுதன்

பொருளடக்கம்	பக்கம்
இயல் 1: அறிமுகம்	8
இயல் 2: பெர்ன்ஸ்டைனின் மொழி மற்றும் சமூகமாக்கம் பற்றிய கோட்பாடு	10
2.0. அறிமுகம்	10
2.1. சமூகமாக்கம்	10
2.1.1. எல்லைக்குட்பட்ட குறியங்கள் மற்றும் விரிவான குறியங்கள்	11
2.1.1.1. முறைப்படுத்தப்பட்ட சூழல்	14
2.1.1.2. கற்பித்தல் சூழல்	14
2.1.1.3. கற்பனை அல்லது புதுமையாக்கச் சூழல்	14
2.1.1.4. ஒருவருக்கொருவர் இடையிலான சூழல்	14
2.2. பெர்ன்ஸ்டைனின் கருத்துக்கு மாற்றலான கருத்துக்கள்	16
2.3. முடிவுரை	18
இயல் 3: முன்னோடி ஆய்வுகள்	**18**
3.0. முன்னுரை	18
3.1. தமிழ்நாட்டில் உள்ள பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிச்சமூகமாக்கம்	19
3.2. கேரளாவில் உள்ள பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிச்சமூகமாக்கம்	24
3.3. தொடக்கப்பள்ளிக் குழந்தைகளின் எழுத்துத்தமிழ் கற்றலில் பேச்சுத்தமி தாக்கம்: ஒரு தொடக்க ஆய்வு	24
3.4. முடிவுரை	25
இயல் 4: நகர்ப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம்	**25**
4.0.முன்னுரை	25
4.1.நகர்ப்புற மாணவர்கள்	26
4.2. ஆய்வுக்களம்	26
4.3. தகவல் திரட்டல் (பண்புமாதிரிகள்)	26
4.3.1. ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்	27

4.3.2.பெற்றோர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்	27
4.3.2.1.பெற்றோரின் கல்விநிலை	27
4.3.2.2.பிள்ளைகளின் கல்விநிலைக் குறித்த கருத்து	28
4.3.2.3.பாடம் சொல்லிக்கொடுத்தல்	29
4.3.2.4. தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தல்	29
4.3.2.5.புத்தகம் மற்றும் நாளிதழ் வாங்குதல்	29
4.3.2.6. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து	30
4.4.எழுதும் திறன்	30
4.4.1.பிழைஆய்வு	31
4.4.2.பிழைகளின் பாகுபாடு	31
4.5. நகர்ப்புற மாணவர்களின் தரவுகளிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகள்	32
4.5.1.வினாநிரலில் கண்டறியப்பட்ட பிழைகள்	32
4.5.1.1. எழுத்துப் பிழைகள்	32
4.5.1.2. சொற்பிழைகள்	36
4.5.1.3.வாக்கியப்பிழை	37
4.5.2.கேட்டெழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்	38
4.5.2.1. எழுத்துப்பிழைகள்	38
4.5.2.2.சொற்பிழைகள்	40
4.5.2.3.வாக்கியப் பிழைகள்	41
4.5.2.4. ஒற்றுப்பிழைகள்	41
4.5.2.5. நிறுத்தற்குறிகள்	42
4.5.2.5.1. காற்புள்ளி	42
4.5.2.5.2. அரைப்புள்ளி	43
4.5.2.5.3. முக்காற்புள்ளி	43
4.5.2.5.4. முற்றுப்புள்ளி	44
4.5.2.5.5. மேற்கோள்	44
4.5.2.5.6. எழுதிய மாணவர்களின் விழுக்காடு	44

4.5.3. தாமாக எழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்	45
4.5.3.1. எழுத்துப் பிழைகள்	46
4.5.3.2. சொற்பிழைகள்	47
4.5.3.3. வீட்டு (பேச்சு) வழக்குச் சொற்கள்	48
4.5.3.4.வாக்கியப்பிழை	49
4.5.4.வாசித்தல் திறன்	49
4.5.4.1.எழுத்து உச்சரிப்புப்பிழை	50
4.5.5.பேசும் திறன்	51
4.5.6.பொருளுணர்த்திறன்	52
4.6. முடிவுரை	52
இயல் 5: கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம்	**52**
5.0.முன்னுரை	52
5.1.கிராமப்புற மாணவர்கள்	53
5.2.ஆய்வுக்களம்	53
5.3. பண்பு மாதிரிகள்	53
5.3.1. ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்	54
5.3.2.பெற்றோர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்	54
5.3.2.1. பெற்றோரின் கல்விநிலை	54
5.3.2.2. பிள்ளைகளின் கல்விலைக்குறித்த கருத்து	55
5.3.2.3. பாடம் சொல்லிக் கொடுத்தல்	56
5.3.2.4. தொலைக்காட்சி பார்க்க அனுமதித்தல்	56
5.3.2.5. புத்தகம் மற்றும் நாளிதழ் வாங்குதல்	57
5.3.2.6. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து	58
5.3.3. கிராமப்புற மாணவர்களின் தரவுகளிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகள்	59
5.3.3.1.வினாநிரலில் கண்டறியப்பட்ட பிழைகள்	59
5.3.3.1.1. எழுத்துப்பிழைகள்	59
5.3.3.1.2.சொற்பிழைகள்	62

5.3.3.1.3. வாக்கியப்பிழை	63
5.3.3.2. கேட்டெழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்	63
5.3.3.2.1. சொற்பிழைகள்	68
5.3.3.2.2. வாக்கியப்பிழை	69
5.3.3.2.3. ஒற்றுப்பிழைகள்	69
5.3.3.2.4. நிறுத்தற் குறியீடுகள்	70
5.3.3.3.1. காற்புள்ளி	70
5.3.3.3.2. அரைப்புள்ளி	71
5.3.3.3.3. முக்காற்புள்ளி	71
5.3.3.3.4. முற்றுப்புள்ளி	71
5.3.3.3.5. மேற்கோள் குறியீடு	71
5.3.3.4. தாமாக எழுதுதல்	72
5.3.3.4.1.எழுத்துப்பிழைகள்	72
5.3.3.4.2.சொற்பிழைகள்	75
5.3.3.4.3.வாக்கியப்பிழை	76
5.3.3.4.4.வீட்டு வழக்குச் சொற்கள்	77
5.3.3.5. வாசிப்புத்திறன்	78
5.3.3.5.1.எழுத்து உச்சரிப்புப் பிழைகள்	79
5.3.3.6.பேசும் திறன்	80
5.3.3.7.பொருளுணர்த்திறன்	80
5.4. முடிவுரை	81
இயல் 6: மொழிச்சமூகமாக்கத்தில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்கள் - ஓர் ஒப்பீடு	**81**
6.0.முன்னுரை	81
6.1.மாணவர்களின் கல்வி குறித்த கருத்து	81
6.2.பெற்றோரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகள்	82
6.2.1.பிள்ளைகளின் கல்விகுறித்த கருத்து	83

6.2.2.பாடம் சொல்லிக்கொடுத்தல்	84
6.2.3.தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தல்	84
6.2.4.புத்தகம் வாங்குதல்	85
6.2.5.பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து	85
6.3.மாணவர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகள்	86
6.3.1.வினாப்பட்டியலில் கண்டறியப்பட்ட பிழைகளின் ஒப்பீடு	86
6.3.2.கேட்டெழுதுதல் முறையில் கண்டறிந்த பிழைகளின் ஒப்பீடு	86
6.3.3.கேட்டெழுதுதல் முறையில் எழுதிய மாணவர்களின் விழுக்காடு	87
6.3.4.தாமாக எழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகளின் ஒப்பீடு	87
6.3.5.தாமாக எழுதும் முறையில் எழுதிய மாணவர்களின் விழுக்காடு	88
6.3.6.வாசித்தல் திறனில் ஒப்பீடு	88
6.3.7.பேசும் திறனில் ஒப்பீடு	88
6.3.8.பொருளுணர்த்திறன் திறனில் ஒப்பீடு	88
6.4.முடிவுரை	89
இயல் 7: நிறைவுரை	**90**

இயல் 1
அறிமுகம்

சமூகமாக்கம் குறித்த ஆய்வானது மொழி, பண்பாடு, அரசியல் சூழல் போன்றவற்றை உள்ளடக்கும். இவ் ஆய்வேட்டில் குறிப்பாக மொழிசார்ந்த சமூகமாக்கம் (Language socialization) கவனக்குவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு சமுதாயத்தின் முக்கிய அங்கமாகத் திகழ்வது மொழியேயாகும். ஒரு மொழி ஒரு குழந்தையை அது எச்சமுதாயத்தைச் சார்ந்தது என்பதை நிர்ணயிக்கும் முக்கியமான அளவுகோளாக விளங்குகிறது. தமிழ்ச் சமுதாயத்தில் பிறந்த ஒரு குழந்தையைத் தமிழ்ச் சமுதாயத்தில் வளரவிட்டால் அது தமிழ் மொழியைத்தான் பேசும். அதே குழந்தையை ஜெர்மன் நாட்டில் வளரவிட்டால் ஜெர்மானிய மொழியைத்தான் பேசும். எனவே, ஒவ்வொரு குழந்தையும் தான் வளருகின்ற சூழலுக்கு ஏற்ப தன்னை அச்சமுதாயத்தில் அடையாளப் படுத்துவதோடு மட்டுமல்லாமல் அச்சமுதாயத்தில் ஓர் பண்புமாதிரியாகவும் விளங்குகிறது. சமுதாயமும் அக்குழந்தையிடம் அச்சமுதாயத்தைச் சார்ந்த பண்புக்கூறுகள் வெளிபட்டால்தான் அக்குழந்தையைத் தன்னில் ஓர் அங்கமாக ஏற்றுக் கொள்கிறது. எவ்வாறு ஒரு குழந்தை தான்பிறந்த சமூகத்துடனும் பண்பாட்டுடனும் அரசியல் சூழலுடனும் மொழிச் சமுதாயத்துடனும் இணைந்து அதில் ஒரு அங்கமாக ஆவதற்கு வேண்டிய நடத்தைகளையும் நடத்தை வெளிப்பாடுகளையும் பெறுகின்றது என்பதுதான் அக்குழந்தையின் சமூகமாக்கமாகும்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களிடையே மொழிச் சமூகமாக்கத்தில் வேறுபாடு இருக்கிறதா? மொழிப்பேறில் இவ்வேறுபாடு எவ்வாறு பிரதிபலிக்கிறது? என்பதை ஆய்வதே இவ்வாய்வின் முதன்மையான நோக்கமாகும். இதற்கு அடிப்படையாக அமையும் சமூகமாக்கம் குறித்த கோட்பாடுகளையும் அதனடிப்படையில் செய்யப்பட்ட ஆய்வுகளையும் விளக்குவது இவ்வாய்வின் இரண்டாம் நோக்கமாக அமைகிறது.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களிடையே மொழிச் சமூகமாக்கத்தில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் அவர்கள் மொழிப் பரிமாற்றத்திலும் அவர்களின் மொழித்திறனிலும் வெளிப்படுகின்றன.மொழிச் சமூகமாக்கத்தில் காணப்படும் வேறுபாடுகளுக்கு அவர்களுடைய வீட்டுச் சூழலும் பள்ளிச் சூழலும் காரணிகளாய் அமைகின்றன.மாணவர்களின் மொழிச் சமூகமாக்கத்தில் அவர்களின் பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் பங்களிப்பு உண்டு.

சமூகமாக்கம் குறித்த பல்வேறு ஆய்வுகள் பல்வேறு கோட்பாடுகளின் அடிப்படையில் வெளிவந்துள்ளன. இவ்வாய்வுகளிலிருந்து தற்போதைய ஆய்வுக்குத் தேவையான நெறிமுறைகள் மட்டும் எடுத்தாளப் பட்டுள்ளன. குறிப்பாக பெர்ன்ஸ்டைன் (Bernstein 1966) என்பவரின் மொழிச் சமூகமாக்கம் குறித்த விளக்கங்கள் அல்லது கோட்பாடுகள் இவ்வாய்வுக்கு அடிப்படையான நெறிமுறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மாணவர்களின் மொழிச் சமூகமாக்கத்தின் அடிப்படையில் அவர்களின் மொழித்திறனை அறியும் பொருட்டு நகர்ப்புற மற்றும் கிராமப்புற அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழாம் வகுப்பு மாணவர்களிடமிருந்து தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. பேசுதல், கேட்டல், படித்தல், எழுதுதல் முதலிய மொழித்திறன்களை விளக்கும் தரவுகள் நேரடியான உற்றுநோக்கல் (Observation) மூலமும் வினாநிரல் மற்றும் எழுத்துத்தேர்வுகள் மூலமும் (Questionnaire and Dictation) சேகரிக்கப்பட்டன. மாணவர்களின் வாசிப்புத் திறனை ஆய்வதற்காக ஒலிநாடாப்பதிவுக் கருவி (Tape recorder) மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இம்மாணவர்களின் மொழிச் சமூகமாக்ததிற்கு அவர்கள்தம் பெற்றோர் மற்ஹும் ஆசிரியர்களின் பங்கு என்ன என்பதை அறிவதற்காக அவர்களுக்கும் தனித்தனியாக வினாநிரல் வழங்கப்பட்டு அதன் மூலமும் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வு ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதி அறிமுகம் ஆகும். இதில் ஆய்வேட்டின் நோக்கம், பரிசோதனைக்கு எடுத்துக் கொண்ட கருதுகோள்கள், ஆய்வின் நெறிமுறை, ஆய்வுக்கான தரவு சேகரிப்பு மற்றும் ஆய்வுச்சுருக்கம் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. இரண்டாவது இயலில் "பெர்ன்ஸ்டைனின் கோட்பாடுகள்" விளக்கப்பட்டுள்ளன. மூன்றாவது இயலில் இவ்வாய்வுத் தொடர்பான சில முன்னாய்வுகளில் இடம்பெற்ற கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. நான்காவது இயலில் நகர்ப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கமும் ஐந்தாவது இயலில் கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கமும் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. ஆறாவது இயலில் இருசார் மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம் குறித்து விரிவாக ஆயப்பட்டு ஆய்வின் கண்டுபிடிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஏழாவது பகுதி ஆய்வேட்டின் நிறைவுப் பகுதியாகும். இதில் ஆய்வுநோக்கங்களின் நிறைவு, பரிசோதனைக்கு எடுத்துக்கொண்ட கருதுகோள்களின் நிறைவு,

இவ்வாய்விலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட புதிய கருத்துக்கள், பயன்பாடுகள் ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன.

இயல் 2

பெர்ன்ஸ்டைனின் மொழி மற்றும் சமூகமாக்கம் பற்றிய கோட்பாடு

2.0 அறிமுகம்

பெர்ன்ஸ்டைன் (Bernstein) 1960-களிலும் 70-களிலும் பல பரிசோதனைகளுக்கும் உற்றுநோக்கலுக்கும் பின்னர் மொழி மற்றும் சமூகமாக்கம் பற்றிய தன்னுடைய கோட்பாடுகளை விரிவாகக் கூறியுள்ளார். இவர் சாம்ஸ்கியினுடைய அறிதிறன் (competence) மற்றும் செயற்திறன் (performance) அடிப்படையிலான மொழிப்பேறு கோட்பாட்டைக் குறையுடையதாகக் கருதுகிறார். சாம்ஸ்கி (Chomsky) அறிதிறனுக்கு முக்கியத்துவம் கொடுத்து மொழியை விதிகளின் ஒழுங்கமைப்பாகப் பார்க்கிறார் என்றும் மொழியின் உண்மை வெளிப்பாடான செயல்திறத்தைப் பற்றிக் கவலைப்படாமல் அதைப் புறக்கணிக்கிறார் என்றும் குறை கூறுகிறார். இவருடைய பார்வையின்படி காணஇயலாத அருவமான லாங்(Langue) என்பதை ஆய்வதால் கிடைக்கும் உண்மைகளை விட பரோல்(Parole) என்பதை ஆய்வதால் கிடைக்கப்படும் உண்மையை நம்பக்கூடியதாகவும் தேவையானதாகவும் கருதுகிறார்.

2.1 சமூகமாக்கம்

இவருடைய கொள்கையில் மொழி என்பது எல்லாப் பேச்சுக் குறியங்களும் (codes) இணங்க வேண்டிய விதிகளின் ஒரு குழுமமாகும். ஆனால் பேசுகின்ற சூழலில் எந்தப் பேச்சுக் குறியங்கள் உட்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிட்ட சூழல்களில் அது சார்ந்த சமூக உறவுகளின்வழி செயல்படும் பண்பாட்டின் செயல்பாடாகும். பேச்சு வடிவங்கள் அல்லது குறியங்கள் சமூக உறவின் தேவைகளைக் குறியீட்டுருவாக்கம் செய்கிறது. பேசப்படுகின்ற பேச்சின் இயல்பைச் சீரமைக்கிறது. பேசுபவர்களுக்கு அப்பேச்சின் முக்கியத்துவம் மற்றும் உறவின் வேறுபட்ட நிரல்களை உருவாக்குகின்றது.

பெர்ன்ஸ்டைன் சமூகமாக்கம் என்பதை ஒரு உயிர் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டைச் சேர்ந்த உயிராக மாற்றப்படும் அல்லது அடையாளப்படுத்தப்படும் செயல்பாடு என்று குறிப்பிடுகிறார். மேலும் சமூகமாக்கம் என்பது கட்டுப்பாட்டின் ஒரு கலவைத் தன்மையான செயல்பாடாகும். இதனால் குறிப்பிட்ட நடத்தை (behaviour), புலனுணர்வு (cognition) மற்றும் உணர்ச்சி (emotion) இவற்றின் விழிப்புணர்ச்சி குழந்தைக்கு உந்தப்பட்டு ஒரு குறிப்பிட்ட வடிவும் (form) பொருளடக்கமும் (contents) தரப்படுகிறது என்கிறார். சமூகமாக்கம் ஒரு குழந்தையை அது செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற பங்களிப்புகளில் தனித்தன்மையாகச் செய்யப்படுவதால் அச்சமூகமாக்கம் குழந்தையைச் சமூகத்தின் பல்வேறுபட்டட விதிகளுக்கு உட்படுத்தி உணர்வுள்ளதாக ஆக்குகின்றது. இன்றைய சூழலில் சமூகமாக்கத்தின் அடிப்படையான காரணிகளாகக் கருதப்படுவன குடும்பம், நண்பர்களின் குழு, பள்ளிக்கூடம் மற்றும் பணிபுரியுமிடம் என்பனவாகும். இக் காரணிகளின்வழி குறிப்பாக அவற்றின் ஒன்றுக்கொன்றான உறவுகளின்வழி சமூகமாக்கத்தின் வேறுபட்ட முறைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

பெர்ன்ஸ்டைனின் கூற்றுப்படி சமுதாயவியல் பார்வையின்படி சமூகமாக்கத்தின் நெறிமுறைகளில் ஆதிக்கம் செலுத்துவது சமூக வகுப்புகளே (social classes) ஆகும். வகுப்பு ஒழுங்குமுறை ஒரு சமூகத்தின் அறிவுப் பங்கீட்டை ஆழமாகக் குறியீடு செய்கின்றது. அது சமூகங்களை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்தி அவற்றை ஒரு அளவீட்டில் நிரல்படுத்துகின்றது. இவருடைய அணுகுமுறையில் வகுப்பொழுங்குமுறை அறிவியல் பகிர்ந்தளிப்பைப் பாதித்துள்ளது. வரலாற்று அடிப்படையில் மக்கள்தொகையின் ஒரு மிகச் சிறிய விழுக்காடுதான் கருவிமொழிகள் என்ற கட்டுப்பாட்டின் கீழ் சமூகமாக்கம் செய்யப்படுகின்றது.

2.1.1. எல்லைக்குட்பட்ட குறியங்கள் மற்றும் விரிவான குறியங்கள்

இத்தகைய சமூகமாக்கத்தில் பெர்ன்ஸ்டைன் இரண்டு விதமான குறியங்களை(codes) அடையாளம் காணுகிறார். அவையாவன:

1. எல்லைக்குட்பட்ட குறியங்கள் (Restricted codes)
2. விரிவான குறியங்கள் (Elaborated codes)

மேலும் இவர் விரிவான குறியங்கள் அதன் பயன்பாட்டாளரை உலகவயமான பொருண்மைகளுக்கு ஈடுபடுத்துகின்றது என்பதையும் எல்லைக்குட்பட்ட குறியங்கள் அதன் பயன்பாட்டாளரை ஒரு குறிப்பிட்ட பொருண்மைகளுக்கு ஈடுபடுத்துகிறது என்றும் வாதிடுகிறார். இவ்விரண்டிற்கான மொழியியல் உருப்படுத்தங்களும் வேறுபடுகின்றன. இதன் காரணமாக அவற்றை உருப்படுத்தம் செய்யும் சமூக உறவுகளும் வேறுபடுகின்றன. விரிவான குறியங்கள் தரப்பட்ட அல்லது வட்டார அமைப்புடன் குறைவான தொடர்புடையது. இதன் காரணமாகக் கொள்கை அடிப்படையில் மாறும் திறனைக் கொண்டிருக்கிறது. விரிந்த குறியங்களின் நிகழ்வுகளில் பேச்சானது சமூக அமைப்பை ஊக்குவதிலிருந்து சுதந்திரமாக இருக்கின்றது. கட்டுப்படுத்தப்பட்ட குறியங்கள் வட்டார, சமூக அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுவான அடிப்படையில் மாற்றத்திற்கான திறனைக் குறைந்த அளவையே கொண்டிருக்கிறது. எனவே, எங்கு விரிந்த குறியங்கள் இருக்கிறதோ அங்கு சமூகமாக்கப்பட்டவர் தன்னுடைய சொந்த சமூகத்தில் கூடுதல் உரிமை உடையவராக இருப்பர். இதனால் அவர் எடுத்துக்கொண்ட சமூக அமைப்பிற்குள் எளிதாக நுழைய இயலும். அதேபோல் எங்கு குறியங்கள் எல்லைக்குட்பட்டவையாக இருக்கிறதோ அங்கு சமூகமாக்கப்பட்டவர் தன்னுடைய சமூகமாக்கத்தின் அடிப்படையுடன் குறைந்த உரிமை உடையவராக இருப்பர். இவ்வாறு பிரதிபலிப்பானது அதன் பரப்பெல்லையில் எல்லைக்குட்பட்டதாக இருக்கும்.

வகுப்பு ஒழுங்குமுறைகளின் விளைவுகளில் ஒன்று விரிந்த குறியங்களுக்கான உரிமையை நிர்ணயிப்பதாகும். மேலும், பெர்ன்ஸ்டைன் எல்லைக்குட்பட்ட குறியங்கள் சுருங்கிய குறியீடுகளில் அவற்றின் அடிப்படையைக் கொண்டிருக்கும் என்றும் ஆனால், விரிந்த குறியங்கள் வெளிப்படுத்தப்பட்ட குறியீடுகளில் அவற்றின் அடிப்படையைக் கொண்டிருக்கும் என்கிறார். எல்லைக்குட்பட்ட குறியங்கள் உருவங்களைச் சார்ந்திருக்கும். ஆனால் விரிந்த குறியங்கள் பகுத்தறிவைச் சார்ந்திருக்கும். இப்பார்வையின் அடிப்படையில் வழக்கமான பேச்சுக் குறியங்களில் ஏற்படும் மாற்றம் பொருட்கள் மற்றும் நபர்களின் உறவுகளை உருப்படுத்தம் செய்யும் வழிகளையும் மாற்றமடையச் செய்யும். மேலும், பெர்ன்ஸ்டைன் விரிவுபடுத்தப்பட்ட மற்றும் எல்லைக்குட்பட்ட பேச்சு மாற்றமடைந்தவைகளின் கருத்துச் சாயல்களைப் பற்றியும் பேசுகிறார். ஒரு மாற்றத்திற்குள்ளான பேச்சானது இலக்கணச்சொல் தேர்வுகளின்மீதான சூழல் கட்டுப்பாடுகளாகக் கருதப்படுகிறது.

சப்பீர் மலினோவ்ஸ்கி (Sapir and Malinowesky) ∴பர்த் (Firth), விகோஸ்கி (Wikosky) மற்றும் லூரியா (Luriya) என்பவர்களின் வேறுபட்ட பார்வைகளின் அடிப்படையில் பேசுபவர்கள் தங்களுக்குள் அண்மைப்பட்டிருந்தால் அவர்களால் பங்கிட்டுக் கொள்ளப்படும் விருப்பங்களின் பரப்பெல்லைக் குறிப்பிட்ட வடிவைக் கொண்டிருக்கும் சாத்தியம் கூடுதலாக இருக்கும் என்று தங்கள் வேறுபட்ட பார்வைகளின் அடிப்படையில் குறிப்பிடுகின்றனர்.

தொடரியல் மாற்றங்களின் பரப்பெல்லைகள் குறைக்கப்பட்டதாகவும் சொற்கள் குறுகிய பரப்பெல்லைக்குள்ளிருந்தே எடுக்கப்பட்டதாதகவும் இருப்பது சாத்தியமாகும். இவ்வாறு சமூக உறவுகளின் வடிவம் மொழி உருப்படுத்தம் செய்ய வேண்டிய பொருண்மைகளின் மீது தெரிவுஅடிப்படையில் செயல்படுகின்றது. இந்த உறவுகளின் பேச்சானது பொதுவாக வரலாறு மற்றும் பொதுவான விருப்பங்களின் அடிப்படையில் வெளிப்படுவதால் பிற நபர்களின் விருப்பம் முன்னதாகவே தீர்மானிக்க இயலுகிறது. இதன் விளைவாகப் பொருண்மைகளை வெளிப்படையான மற்றும் விரிவான நிலைக்கு உயர்த்தும் தேவை குறைவானதாக இருக்கும். கருத்துப் பரிமாற்றத்தின் தர்க்க அமைப்பு (Logical structure) தொடரியல் தெரிவுகளின்வழி வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவை குறைக்கப்படுகின்றது. மேலும் பேசுபவர் தன்னுடைய கருத்துப் பரிமாற்றத்தைத் தனிமையாக்கம் (aloneness) செய்ய விரும்பினால் அவர் தன் பேச்சின் வெளிப்பாட்டுத் தொடர்புகளை அல்லது முறைகளை மாற்றி இதைச் செய்வது சாத்தியமாகும். இக்கட்டுப்பாடுகளில் பேச்சு வலுவான உருவகத்தன்மையைக் கொண்டிருக்கும். இச்சூழலில் பேசுபவர், "எவ்வாறு ஒன்று கூறப்படுகிறது? எப்போது கூறப்பட்டது?" என்பதில் கூடுதல் அக்கறையுடையவராக இருப்பர். பொருண்மைகளின் வேறுபட்ட வகைகளைப் பொறுத்திருந்து அமைதியாக ஏற்றுக் கொள்ளும் இத்தகைய நேரிடுகைகளில் பேச்சுச்சூழலுக்கு அப்பால் புரிந்து கொள்ள இயலாது.

இவ்வாறு ஒரு சமூக உறவின் வடிவங்கள் மொழியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய பொருண்மைகளின் மீது தெரிவு அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது. இந்த உறவுகளை உள்ளுறை செய்து வெளிப்படுத்தப்படாத ஊடகங்கள் அந்த உறவிற்கு வெளியே இருப்பவருக்குத் தெரியாது. ஏனென்றால் அவை பேசுபவர்களுக்கு இடையில் வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனால் இப்பேசுபவர்களின் பங்களிப்பை நாம் சமூகமாக்கப்பட்ட சமுதாய பிரிவுசார் பங்களிப்புகள் என்று கூறலாம். இது எல்லைக்குட்பட்ட சமூக உறவுகளுக்கிடையேயான

உறவை பொருண்மையின் சமூகப் பிரிவாக்கப்பட்ட பங்களிப்புகளின் அடிப்படையிலும் அவற்றின் பொருளிலும் பேச்சு உருப்படுத்தத்தின் அடிப்படையிலும் செய்ய இயலுகிறது.

ஒரு குடும்பத்தில் உள்ள ஒரு குழந்தையின் சமூகமாக்கம் ஒரு ஊடாட்டமுள்ள சூழல்களின் குழுமத்திற்குள் நடக்கிறது. அச்சூழல்களை நாம் நான்காக வேறுபடுத்த இயலும்: அவை முறைப்படுத்தப்பட்ட சூழல், கற்பித்தல் சூழல், கற்பனை அல்லது புதுமையாக்கச் சூழல் மற்றும் ஒருவருக்கொருவர் இடையிலான சூழல்.

2.1.1.1 முறைப்படுத்தப்பட்ட சூழல் (Regulative context)

இவை குழந்தைகள் நன்மை-தீமை நிரலின் விதிகளை அறிந்து கொள்ளச் செய்யும் அதிகார உறவுகளாகும்.

2.1.1.2 கற்பித்தல் சூழல் (Instructional context)

இதில் குழந்தை பொருட்கள் மற்றும் நபர்களின் இயல்பைக் கற்கின்றது. மேலும் வேறுபட்ட வகையான திறன்களையும் பெறுகிறது.

2.1.1.3 கற்பனை அல்லது புதுமையாக்கச் சூழல் (Immagination or Irrovating context)

இதில் குழந்தைத் தன் வழியிலேயே சென்று பல்வேறு பரிசோதனைகிள்ன மூலம் தன் உலகத்தை உருவாக்கத் தயார்படுத்தப்படும்.

2.1.1.4 ஒருவருக்கொருவர் இடையிலான சூழல்

இதில் குழந்தை தன்னுடைய மற்றும் மற்றவர்களின் பாதிப்பு நிலைகளை அறிந்து கொள்கிறது.

இந்நான்கு சூழல்களின் மொழி உருப்படுத்தம் எல்லைக்குட்பட்ட பேச்சு மாறிகளின் கூடுதலான பயன்பாட்டை உள்ளடக்கினால் அதனை எல்லைக்குட்பட்ட குறியம் என்று கூறலாம். மாறாக, இந்நான்கு சூழல்களிலும் மொழி உருப்படுத்தம் எல்லைப்படுத்தப்படாத பேச்சு மாறிகளின் கூடுதலான பயன்பாட்டைப் பயன்படுத்தினால் அதனை விரிந்த குறியம் என்று வகைபடுத்தலாம்.

சமூகமாக்கம் என்பது புதிதாகப் பிறந்த குழந்தை தான் பிறந்த சமுதாயத்தில் பண்பாட்டிற்கேற்ப உருவாக்கப்படுவதாகும். அதன் காரணமாக அச்சமுதாயத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுப்பினராக ஆகும் என்ற டன்ஹெமின் (Dunhame – 1957) மேற்கோளைக் குறிப்பிடுகிறார். அதாவது குழந்தை அது சார்ந்துள்ள சமுதாயத்தின் பொருத்தமான வயதுவந்த அங்கத்தினராக மாறுவது சமூகமாக்கச் செயல்பாடாகும். இவ்வாறு சமூகமாக்கம் என்பது பண்பாட்டைப் பரிமாறும் செயல்பாடு மட்டுமின்றி அப்பண்பாட்டின் நோக்கமுமாகும்.

சமூகமாக்கச் செயல்பாடு சமூக உளவியல் களத்தில் தீவிரமான ஆய்வுப்பாடமாக இருந்தாலும் அது தொடர்புள்ள துறைகளான சமூகவியல் (sociology), சமூக-மானிடவியல் (social anthropology), பண்பாட்டு-மானிடவியல் (cultural anthropology), உளமொழியியல் (psycholinguistic) மற்றும் பண்பாடு கடந்த உளவியல் போன்றவற்றிலும் கவனக்குவிப்பு செய்யப்படுகின்றது.

மேற்குறிப்பிட்டவர்கள் எல்லோரும் தனிமனிதத் தன்மைக்குச் (Personality) சமூகமாக்கத்தின் முக்கியத்துவத்தைக் கருதுவதுடன் சமூகமாக்கச் செயல்பாடுகளில் பண்பாட்டு அடிப்படையிலான வேறுபாடுகளையும் கருத்தில் கொள்கின்றனர். மனித நடத்தைச் சமூகத்திலிருந்து தனிப்பட்டு நிகழ்வதல்ல. அந்தச் சமூகத்தைச் சார்ந்த பலராலும் ஊக்கப்படுத்தப்படும். இவ்வாறு சமூகமயமாக்கம் குறித்த ஆய்வானது ஒரு விரிந்த தலைப்பாகும். தற்போது சமூகமாக்கச் செயல்பாட்டின் ஆய்வு குழந்தைகள் வளர்ப்புக் குறித்து அதிக ஆர்வம் காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட குழந்தை வளர்ப்பு செயற்பாங்கு நோக்கில் சமூகவியலார் (sociologist), உளவியலார் (psychologist), மானிடவியலார் (anthropologist), மொழியியலார் (Linguistis) மற்றும் பலர் தங்களுடைய நோக்கத்திற்காக அவரவர் வழிகளில் சமூகமாக்கத்தை வரையறை விளக்கம் செய்கின்றனர். சமூகவியலார் முன்னர் குறிப்பிட்ட டன்கேமின் வரையறை விளக்கத்தைத் தருகின்றனர். மானிடவியலார் சமூகமாக்கத்தை, "ஒரு சமூகத்தைச் சார்ந்த உரிய உறுப்பினர்களுக்குப் பண்பாடு பரிமாறப்படும் செயல்பாடு" என்று குறிப்பிடுகின்றனர்.

2.2. பெர்ன்ஸ்டைனின் கருத்துக்கு மாற்றலான கருத்துக்கள்

ஆரம்பகாலக் கட்டத்தில் பெர்ன்ஸ்டைனின் சமூகமாக்கக் கோட்பாடு விரைவான வெற்றியை அடைந்தது. ஏனென்றால் அது பேச்சுக் குறைப்பாட்டுக்கான காரணத்தை எடுத்ததுக் கூறியது. பின்னர் பெர்ன்ஸ்டைனைப் பின்பற்றியவர் அவர் கோட்பாடுகளைப் பரிசோதனைன செய்யும்பொழுது அக்கோட்பாட்டின் குறைபாடுகள் வெளிப்பட்டன. பெர்ன்ஸ்டைனின் கோட்பாடு லபோ போன்றவர்களால் குறைகூறப்பட்டது. பெர்ன்ஸ்டைனின் குறைக்கருதுகோளின் மதிப்பீடானது, குழந்தைகளின் கல்வித் திறனில் குடும்பச்சூழல் மற்றும் மொழிவேறுபாடு இவற்றின் விளைவுகுறித்த பல்வேறுபட்ட கருத்துக்களும் விவாதங்களும் கூறப்பட்டாலும் குழந்தைகள் பேசும் மொழி அதன் கல்விமுறையில் வெற்றியின் பாதையைப் பாதிக்கிறது என்று தோன்றுகிறது.

1970-களில் கல்வி உளவியலார்களால் (Educational psychologist) மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் பள்ளிகளில் கீழ்மட்ட குழந்தைகளின் குறைந்தத திறமைக்குக் காரணங்களை ஆய்ந்தது. இந்த ஆய்வாளர்கள் குழந்தைகளின் குறைந்த திறமைக்கான காரணங்களையும் அவற்றை சரிசெய்வதற்கான முக்கிய அறிவுரைகளையும் கூறினார்.

பர்னஸ் (Barnanes - 1971) இச்சிக்கலை மற்றொரு கோணத்தில் ஆய்ந்தார். அவர் வகுப்பறையில் மாணவர்களின் முழுமையான பங்களிப்புத்தான் அவர்களின் மொழிச் சமூகமாக்கத்தை உயர்த்த இயலும் என்று வாதிடுகிறார். அவர் ஆசிரியர்கள் வகுப்பறையில் குழந்தைகளுக்கு சில அர்த்தமில்லா விளையாட்டுக்கள் மூலம் பயிற்சியளிப்பதில் நேரிடும்

கடினத்தை எடுத்துரைக்கிறார். அவர் ஆசிரியர் ஒரு புதிய மொழிவடிவை அறிமுகப்படுத்துவது அவர்களுடைய வேலையல்ல. ஆசிரியர் ஒரு முறையின்கீழ் மொழியைப் பயன்படுத்த மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்கிறார்.

ஓவர்மென் (Overmen) பெர்ன்ஸ்டைனின் கருதுகோள்களின் பொருந்தாமையைப் பட்டியலிடுகிறார். அவர் பட்டியலிடும் நான்கு குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

1 பெர்ன்ஸ்டைன் நடத்தையின் மொழிச்சாராக் காரணியில் போதுமான கவனம் செலுத்தவில்லை.
2 மொழிக் குறியங்கள் என்பதன் வரையறைவிளக்கம் சரியாக விளக்கப்படவில்லை.
3 சுற்றறிக்கையானது (Circular) பேச்சு வடிவுகளுக்கும் பங்களிப்புகளுக்கும் இடையே உள்ள பொருத்தத் தொடர்புகளும் மொழித் திட்டமிடலுக்கும் நடவடிக்கைகளுக்கும் இடையே உள்ள தொடர்பும் வேறுபடுத்தப்பட வேண்டும்.

மொழிக்குறியம் என்பதற்கும், கிளைமொழி என்பதற்கும் வேறுபாடு இல்லை. வகுப்பு வேறுபாடுகளுக்குப் பொருத்தமாக இருந்திட குறியங்கள் தவிர கிளைமொழிகளும் அறிவுத் திறன்களின் இரண்டாம் இருப்பானாகச் செயல்படுகிறது.

ஓவர்மென், "எவ்வாறு மொழிக் குறியங்கள் பங்களிப்புக் கோட்பாட்டின் அடிப்படை ஊகங்களுடன் முறையாகத் தொடர்புபடுத்த முடியும்?" என்ற அடிப்படைக் கோட்பபாட்டுக் கேள்வியை எழுப்புகிறார். அவர் எளிமையான மற்றும் கலவைத்தன்மையான மொழிக்குறியக் கோட்பாட்டை முன்மொழிகிறார். இவ்விரண்டும் சமூக அறிவியலின் நெறிமுறை அடிப்படையிலான சிக்கலைப் பிரதிபலிக்கிறது. அவை **ஹெபர்மென்ஸ்** என்பவரால் எடுத்துக்காட்டப்படுகிறது. ஓவர்மேனின் முடிவுரைப்படி அவருடைய மற்றும் பெர்ன்ஸ்டைனுடைய சிக்கல்கள் கலவைத்தன்மையான அணுகுமுறையைச் சார்ந்தது.

பிரைட்டர் மற்றும் **எங்கல்மென்** என்போர் பெர்ன்ஸ்டைனுடைய கோட்பாட்டை எடுத்துக்கொண்டு விரிவாக்கப்பட்ட பேச்சு, கீழ்வகுப்பில் உள்ள குழந்தைகளை சமூகப்படிக்கட்டின் மேலே செல்ல வைக்கின்றது, அவர்களின் கூடுதல் கலவைத்தன்மையான பேச்சு தானாகவே சமுதாயச் சூழலின் கூடுதல் வேறுபடுத்தப்பட்ட புரிந்துகொள்ளலுக்கு உதவுகிறது என்று முன்மொழிகிறார். பிரைட்டர் மற்றும் எங்கல்மென்னுடைய ஆய்வு மிக

முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் கூற்றுப்படி கருப்பினக்கீழ்மட்ட வகுப்புக் குழந்தைகளின் குறைந்த அறிவுநுட்பத்திறன் அவர்களின் குறைவான பேச்சில் பிரதிபலிக்கிறது. அவர்கள் கீழ்வகுப்புக் குழந்தைகள் மொழியைத் தகவலைப் பெறுவதற்கும் அதனைப் பகுப்பாய்வதற்கும் உள்ள உபாயமாகப் பயன்படுத்துவதன் மூலமான குறைந்த திறனைக் காட்டுகின்றனர் என்ற பொதுமையான முடிவுக்கு வருகின்றனர்.

லபோ மற்றும் பிறர் (Labov etc 1968) நிலைப்பேறாக ஆங்கிலத்தை ஆய்ந்து பிரைட்டரும், எங்கல்மெனும் தாழ்மட்ட வகுப்புக் குழந்தைகளுடைய பேச்சுத் திறன்களை எந்த அளவிற்குத் தவறாக உருப்படுத்தம் செய்துள்ளனர் என்றும் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர் என்றும் காட்டுகின்றனர். அவர்கள் அடிமட்ட வகுப்புக் குழந்தைகள் வேறுபட்டட ஒருவகையான ஆங்கிலத்தைப் பேசுகின்றனர் என்றும், அது நடுத்தர வகுப்பின் நிலைபெறு மொழியிலிருந்து முறையாகவும், சீராகவும் வேறுபடுகின்றது என்றும் வெளிப்படுத்தினார். அவர் தன்னுடைய நிலைபேறு அடையாத பேச்சு ஆங்கிலத் தரவிலிருந்து பிரைட்டர் மற்றும் எங்கல்மென் எய்திய முடிவுக்கு நேர் எதிரிடையான முடிவை அடைந்தார். அவர் அடிமட்டவகுப்புக் குழந்தைகள் பேச்சு அடிப்படையில் செழுமையான பண்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்ற முடிவுக்கு வதுருகிறார். லபோவினுடைய கொள்கை அடிப்படையில் மொழிக்கூற்றுகள் அதைப் பேசுபவருடைய சமூகச்சூழல் மற்றும் இயற்கைச் சூழல் அடிப்படையில் உற்றுநோக்கப்பட வேண்டும். அவை அவர்களது இனத்தின் தேவைகளுடனும் சமூகத் தேவைகளுடனும் செயல்பாடு அடிப்படையில் தொடர்புப் படுத்த வேண்டும்.

2.3 முடிவுரை

இவ்வாறு பெர்ன்ஸ்டைனின் இரு வகையிலான குறியங்களை விளக்கிக் குழந்தைகளின் மொழி நடத்தையை வேறுபடுத்துகிறார். இவ்வாய்வில் பெர்ன்ஸ்டைனின் கோட்பாடு எந்த அளவிற்குச் சரியானது என்றும் உண்மையிலேயே இரண்டு விதமான குறியங்கள் அதாவது, எல்லைப்படுத்தப்பட்ட குறியம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட குறியம் இருக்கிறன்றனவா? என்று ஆராயப் படுகிறது.

பகுதி - 3

முன்னோடி ஆய்வுகள்

3.0 அறிமுகம்

குழந்தைகளின் மொழிப்பேறு குறித்து பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பள்ளிக் குழந்தைகளின் பல்வேறு நிலைகளில் மொழித்திறன் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சில ஆய்வேடுகளாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகளில் பல மாணவர்களின் மொழித்திறனில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை பட்டியலிட்டு அக்குறைபாடுகளை நீக்குவதற்கான வழிமுறைகளைத் தருவதாக அமைகின்றன. தமிழ்மொழியின் மொழித்திறன் குறித்தும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வெளிவந்துள்ளன. முதல்வகுப்பு மாணவர்களிலிருந்து உயர்நிலை மாணவர்கள்வரை மொழித்திறன் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட கல்விமட்டத்தில் மாணவர்கள் பெறவேண்டிய மொழித்திறன் இவ்வளவுதான் என்று கருத்தில் கொண்டு அத்திறன்கள் மாணவர்களில் பெரும்பான்மையோர் பெறவில்லை என்பதன் அடிப்படையில் அமைகின்றன.

ஒருசில ஆய்வுகள் பாடத்திட்டத்தையும் பாடநூலையும் மதிப்பீடு செய்து அவற்றின் நிறை-குறைகளை விளக்குவனவாக அமைகின்றன. சில ஆய்வுகள் பிழைஆய்வுகள் என்ற தலைப்பில் மாணவர்கள் எழுதுவதிலும் பேசுவதிலும் ஏற்படும் பிழைகளைக் கண்டறிந்து அதற்கான காரணங்களை ஆய்வதாகவும் ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறுவதாகவும் அமைகின்றன. இப்பகுதியில் மாணவர்களின் மொழித்திறன் குறித்த முன்னோடி ஆய்வுகள் குறித்த சுருக்கம் தரப்பட்டுள்ளது.

3.1 தமிழ்நாட்டில் பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிச் சமூகமாக்கம் (Language Socialization of Scheduled Castes Children in India Tamil Nadu a Case Study)

இத்தலைப்பில் சுரேஷ் (Suresh,1980) என்பவரால் ஒரு ஆய்வு 1980-ல் மேற்கொளள்பட்டது. இவ்வாய்வு பட்டியலிடப்பட்ட (scheduled) குழந்தைகளுக்கும் பட்டியலிடப்படாத (Non-Scheduled) குழந்தைகளுக்கும் இடையில் உள்ள மொழிச்சமூகமாக்கத்தின் வேறுபாடு குறித்து ஆய்கின்றது. இதில் ஆய்வுக்களமாக தஞ்சாவூர் மாவட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. சுரேஷ் வினாநிரல் தயாரித்து அதன் மூலம் பட்டடியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத இனக் குழந்தைகளின் மொழிச்சமூகமாக்க வேறுபாட்டிற்கான காரணங்களை ஆய்கிறார். இவருடைய ஆய்வின்படி பட்டியலிடப்பட்ட

இனக்குழந்தைகள் குறைந்த மொழிச்சமூகமாக்கம் உடையவர்களாகவும், பட்டியலிடப்படாத இனக்குழந்தைகள் கூடுதல் மொழிச்சமூகமாக்கம் உடையவர்களாகவும் வெளிப்படுகின்றனர்.

இவருடைய ஆய்வின்படி பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிக்கும், நிலைபெறுபெற்ற தமிழ்மொழிக்கும் இடையே உள்ள வேறுபாட்டின் பரிமாணம் பட்டியலிடப்படாத இனக்குழந்தைகளின் மொழிக்கும் நிலைபெறுபெற்ற தமிழ்மொழிக்கும் இடையே உள்ள வேறுபாட்டைவிட கூடுதலாக இருக்கின்றது என்று கூறுகிறார். மொழியின் ஒலியனியல் (phonology), உருபனியல்(Morphology), தொடரியல் (syntax) என்ற மூன்று நிலைகளிலும் இவ்வேறுபாடு வெளிப்படுவதாகக் கூறுகிறார்.

பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளுடைய கருத்தாடல்களில் (Discoses) ஒரு கருத்தை அல்லது ஒரு நிகழ்வைக் குறிப்பிடும்போது ஒரு தெளிவின்மை காணப்படுவதாகக் கூறுகிறார். மொழிச்சமூகமாக்கத்தில் பெற்றோர்களின் பங்களிப்பு, பள்ளியின் பங்களிப்பு மற்றும் தகவல் தொடர்பு ஊடகங்களின் (Mass Media) பங்களிப்பு போன்றவற்றை விளக்குகிறார். மேலும் இவர் பின்வரும் வரைபடங்கள் மூலம் பிராமணர்க் கிளைமொழிக்கும் (Bramin's Dialect) பிராமணர் அல்லாத கிளைமொழிக்கும் (Non-Bramin's Dialect), பட்டியலிப்பட்ட இனத்தாரின் மொழிக்கும் நிலைபெறு மொழிக்கும் இடையே உள்ள தொடர்பையும், தூரத்தையும் வெளிப்படுத்துகிறார்.



தமொ – தமிழ்மொழி

நிமொ – நிலைபெறுமொழி

நிபேமொ – நிலைபெறு பேச்சுமொழி

கிவ - கிளைமொழி வகைகள்

சகி - சமூகக் கிளைமொழி

வகி - வட்டாரக் கிளைமொழி

மேதவகி -மேல்தட்டுவகுப்புக் கிளைமொழி

கீதவகி -கீழ்த்தட்டுவகுப்புக் கிளைமொழி

பிஅகி -பிராமணர் அல்லாத கிளைமொழி

பிகி -பிராமணர்க் கிளைமொழி

தாழ்இ -தாழ்த்தப்பட்ட இனம்

பழஇ -பழங்குடி இனம்

மொசிபே –மொழிச்சிறுபான்மையினர் பேச்சு

நிசி -நிறுவன சிறுபான்மையினர்

பமொபே -பண்பாட்டு மொழிச்சிறுபான்மையினர்

கு1 -குழு1

கு2 -குழு2



தாஇ - தாழ்த்தப்பட்ட இனம்

கு1 - குழு1

கு2 - குழு2

நிபேத - நிலைபெறு பேச்சுத்தமிழ்

மேவகி - மேல்தட்டுவகுப்புக் கிளைமொழி

பிஅகி - பிராமணர் அல்லாத கிளைமொழி

பிகி - பிராமணர் கிளைமொழி

மொதூ1 – மொழிதூரம் 1

மொதூ2 – மொழிதூரம் 2

மேற்கண்ட வரைபடங்களின் அடிப்படையில் பட்டியலிடப்பட்ட இனத்தவரின் மொழிக்கும் நிலைபெறு மொழிக்கும் இடையில் உள்ள தூரம், பட்டியலிடப்படாத இனத்தவருடைய மொழிக்கும் நிலைபெறு மொழிக்கும் இடையில் உள்ள தூரத்தைவிட மிகக் கூடுதலாக இருப்பதாகக் காட்டுகிறது. இந்த முடிவு பட்டியலிடப்பட்ட இனக்குழ்நதைகள் நிலைபெறு மொழியின் பேற்றினை அடைவதற்கு அதிக சிரமப்படுவதையும், பட்டியலிடப்படாத இன்ககுழந்தைகள் நிலைபெறு மொழியின் பேற்றினைப் பெறுவதற்கு குறைந்த அளவு சிரமப்படுவதையும் நமக்கு விளக்குகிறது.

இறுதியாக இவர் தன்னுடைய ஆய்வு முடிவின் அடிப்படையில், பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிச்சமூகமாக்கத்திற்கு வேண்டிய நடவடிக்கையைப் பின்வருமாறு பட்டியலிடுகிறார்:

1. ஆதிதிராவிடக் குழந்தைகளுக்குத் தனியான பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்குப் பதிலாக அவர்கள் பொதுவான பள்ளிக்கூடங்களில் பிற வகுப்புக் குழந்தைகளுடன் சேர்ந்து பயில்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். இதனால் இக்குழந்தைகளுக்குப் பொதுவான மொழிச்சூழல் கிடைக்கும். இடைவெளியைப் பூர்த்திசெய்ய இக்குழந்தைகளுக்குக் கூடுதலான பயிற்சி தரப்படலாம்.

2.பட்டியலிடப்பட்ட சமுதாயக் குழந்தைகளுக்கு நிலைபெறுபெற்ற பேச்சுத்தமிழைக் கற்றுத்தர வேண்டும். அவர்களுடைய கிளைமொழியில் விளக்கங்கள் தரப்படவேண்டும். ஆனால் நிலைபெறுபெற்ற பேச்சுத்தமிழுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

3.மாணவர்கள் சரியான வாக்கியங்களை உருவாக்குவதில் திறன்பெற வேண்டி அவர்களுக்குத் தொடர்ச்சியான படித்தல் மற்றும் எழுதுதல் பயிற்சிப் பாடங்கள் தரலாம். படித்தல் பயிற்சி அவர்கள் உச்சரிப்புத் திறனை முன்னேற்றாவிடினும் அது புதிய சொற்களையும் தொடரியல் அமைப்பொழுங்குகளையும் அறிய உதவும்.

4.மூன்றாம் வகுப்புவரை உள்ள சுதந்திரமான தேர்ச்சி (Free promotion) நிறுத்தப்படவேண்டும். மொழி நெடுங்கணக்கு (Language alphabets) மற்றும் எழுதுதலின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

5. ஆங்கிலத்திற்குத் தரப்படும் தேவையற்ற முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும்.

6.மாணவர் - ஆசிரியர் விகிதம் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும்

7.ஆசிரியர்களுக்குக் கற்பிப்பதற்குப் போதுமான காலம் தரப்படவேண்டும். அவர்களைக் கூடுதலான வேலைகளில் ஈடுபடுத்தக் கூடாது.

8.மொழிப்பாடநூல் பரிசோதிக்கப்பட்டு சீரான தன்மை பாதுகாக்கப்பட வேண்டும்.

9.பாடத்திட்டம் பல வேறுபட்ட விசங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

10.பட்டியலிடப்பட்ட வகுப்புக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முறையான கல்வியின் முக்கியத்துவம் குறித்து கற்பிக்கப்படவேண்டும்.

11.கேட்டல்-பார்த்தல் கல்வி (Audio - visual communication) தரப்பட வேண்டும். தகவல்தொடர்புச் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

12.மாணவர்கள் செய்தித்தாள்கள், கால இதழ்கள் மற்றும் புத்தகங்கள் தரப்படவேண்டும்.
13.ஆசிரியர்கள் மொழிப்பயன்பாட்டை வகுப்பில் கட்டுப்படுத்த வேண்டி போதுமான மற்றும் சரியான பயிற்சியளிக்க வேண்டும். அவர்கள் வகுப்பில் நிலைபெறுபெற்ற மொழியைத் தான் முதலில் பயன்படுத்த வேண்டும்.
14.பட்டியலிடப்பட்ட வகுப்புக் குழந்தைகளுக்கான கல்வித்திட்டத்தில் ஆரோக்கியம் மற்றும் சத்துணவுத் திட்டங்களை உள்ளடக்க வேண்டும்.

3.2 கேரளாவில் உள்ள பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் சமூகமாக்கம்

Language Socialisation of Scheduled Castes Children in Kerala

மேற்சொன்ன தலைப்பில் சுரேஷ் மற்றும் இராஜேந்திரன் என்பவர்களால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு கேரளத்திலுள்ள பட்டியலிடப்பட்ட இனக்குழந்தைகளின் மொழிக்கும் பட்டியலிடப்படாத இனக்குழந்தைகளின் மொழிக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஆய்ந்து மொழிப்பேறு அடிப்படையில் சமூகமாக்கத்தை விளக்குவதாக அமைகின்றது. (Rajendran, 2000).

3.3 தொடக்கப் பள்ளிக் குழந்தைகளின் எழுத்துத்தமிழ் கற்றலில் பேச்சுத்தமிழின் தாக்கம்: ஒரு தொடக்க ஆய்வு

A Pilot Study in the Impact of Spoken Tamil on Learning Written Tamil by the Primary School Children

மேற்கண்ட தலைப்பில் பேராசிரியர் கி.அரங்கன் மற்றும் ஜெயக்குமார் (Rangan and Jayakumar, 1988) என்பவர்களால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்களுடைய ஆய்வு தமிழ்மொழியின் இரட்டைவழக்கை (Diglosis) அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. இவர்கள் வீட்டில் பேச்சு வழக்கை மொழிப்பேறாகப் பெற்ற மாணவர்கள் பள்ளியில் சொல்லிக்கொடுக்கப்படும் நிலைபெறு மொழிப் பேற்றினைப் பெறுவதில் எந்த அளவிற்கு வெற்றிப் பெறுகின்றனர்? என்பதை ஆய்கின்றனர்.

ஒலியனியல், உருபனியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் நிலைபெறு மொழியில் பெறும் மாணவர்களின் திறனைத் திரட்டப்பட்ட தரவுகள் மூலம் ஆய்கின்றனர். இவர்கள் பேச்சுத் தமிழின் பாதிப்பால் எழுத்துத் தமிழில் ஏற்படும் தவறுகளைப் பட்டியலிடுகின்றனர்.

எ.கா

uukkam ----------ukkam

(ஊக்கம்) (உக்கம்)

tappaatu----------tappatu

(தப்பாது) (தப்பது)

இக்குறைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எதையும் இவர்கள் இவ்வாய்வில் குறிப்பிடவில்லை.

3.4 முடிவுரை

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களுடைய மொழிச்சமூகமாக்கம் குறித்த தற்போதைய ஆய்விற்கு மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் யாவும் பல வழிகளில் உதவியாக அமைந்து இவ்வாய்விற்கு முன்னோடி ஆய்வுகளாக அமைகின்றன.

இயல் 4

நகர்ப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம்

4.0 முன்னுரை

மொழித்திறன் என்பது படித்தல், எழுதுதல், கேட்டல், பேசுதல் ஆகிய செயல்பாடுகளின் வெளிப்பாடே ஆகும். ஒரு மாணவன் தன் தாய்மொழியிலோ அல்லது தானறிந்த மொழியிலோ மேற்கண்ட திறன்களைப் பெற்றிருந்தால்தான் அவன் அம்மொழியில் முழுமையான மொழியறிவு பெற்றவனாகிறான். இத்திறன்களைப் பெறுவதில் நகர்ப்புற மாணவர்கள் எந்த அளவுக்கு வெற்றிப்பெற்றுள்ளனர் என்பதன் அளவீட்டை ஆய்வதும் நகர்ப்புற மாணவர்கள் பெர்ன்ஸ்டைன் குறிப்பிடும் விரிக்கப்பட்ட மற்றும் எல்லைக்குட்பட்ட குறியங்களைப்

பெற்றுள்ளார்களா என்பதை ஆய்வதும், மேலும் நகர்ப்புற மாணவர்களின் மொழிச் சமூகமாக்கம் எந்தளவு வெற்றியடைந்துள்ளது என்பதை விளக்குவதும் இப்பகுதியின் நோக்கமாக அமைகிறது.

4.1 நகர்ப்புற மாணவர்கள்

பொதுவாகவே நகரச்சூழலில் வாழ்ந்து வரும் மாணவர்கள் வீட்டில் பேச்சு மொழியினைப் பயன்படுத்தினாலும் பள்ளியில் நிலைபெறு மொழியையும் எழுத்துமொழியையும் பயிலுகின்றனர். எனவே, பள்ளிகளே இம்மாணவர்களின் பேசுதல், கேட்டல், எழுதுதல் படித்தல் முதலிய திறன்களைப் பெறுவதற்கு ஊக்குவிக்கின்றன. மேலும் நகரச்சூழலில் அவர்களிடையே நிலவும் மக்கள் தகவல் தொடர்பு ஊடகங்களின் வெளிப்பாடுகளாலும் அவர்கள் தமது மொழியறிவை மேம்படுத்தும் வாய்ப்புகள் கூடுதலாக உள்ளன.

4.2 ஆய்வுக்களம்

தஞ்சை நகரிலிருந்து நாகை செல்லும் சாலையில் அமைந்திருக்கும் வண்டிக்காரத்தெருவில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளி இப்பகுதியின் ஆய்வுக்களமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை செயல்பட்டு வரும் இப்பள்ளியில் சுமார் 200 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். தலைமையாசிரியர் முதலான ஏழு இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளியைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் வசதி குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகளே இப்பள்ளியில் பயிலுகின்றனர்.

4.3 தகவல் திரட்டல் (பண்புமாதிரிகள்)

இப்பள்ளியில் பயிலும் ஏழாம் வகுப்பைச் சார்ந்த 30 மாணவர்கள் இவ்வாய்வின் பண்புமாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஆய்விற்குத் தேவையான தகவல்கள் வினாநிரல் (Quistionare), எழுத்துமுறைத் தேர்வுகள் (Dictation), ஒலிப்பதிவு (Taperecorder) மற்றும் உற்றுநோக்கல் (Observation) முறைகளிலும் சேகரிக்கப்பட்டது. இவ்வாய்வின் நோக்கம் எதுவெனில், எந்த அளவுக்கு மாணவர்களிடம் மொழிச் சமூகமாக்கம் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது, அதன் நிறைகுறைகள் என்ன? என்பதை ஆய்வதாகும். அம்

மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்திற்கு அவர்கள்தம் பெற்றோரும் ஆசிரியரும் எந்த வகையில் காரணமாக அமைகிறார்கள்? என்பதை அறிவதற்காக, மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமும் வினாநிரல் மூலம் ஆய்விற்குத் தேவையான தகவல்கள் பெறப்பட்டன.

4.3.1. ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்

மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்தில் அதிக தொடர்புடையவர் அவர்களுடைய மொழியாசிரியரான தமிழாசிரியரே ஆவார். இப்பள்ளியின் தலைமையாசிரியரே தமிழாசிரியராகச் செயல்படுவதால் அவரிடமே வினாநிரல் மூலம் ஆய்விற்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. அதில் மாணவர்களின் கல்விநிலைக் குறித்த சுமார் 26 வினாக்கள் வினவப்பட்டிருந்தன. அதற்கு அவர் கீழ்க்கண்டட தகவலை நல்கினார்.

தொடக்கநிலைவகுப்பு	நடுநிலை வகுப்பு
பரவாயில்லை	நன்று

மொழியாசிரியரின் இத்தரவுகளிலிருந்து மாணவர்களுடைய கல்வித் தரத்தினை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

4.3.2. பெற்றோர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்

பெற்றோருடைய கல்வி, தொழில் மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களிலிருந்தே அவர்தம் பிள்ளைகளின் மொழிச்சமூகமாக்கத்தை நாம் ஓரளவுக்கு புரிந்துகொள்ள முடியும். தற்போதைய ஆய்விற்காகக் பெற்றோர்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சில விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

4.3.2.1. பெற்றோரின் கல்விநிலை

ஒரு மாணவனுடைய கல்வித்தரம் அவனுடைய பெற்றோரின் கல்வித்தரத்தைப் பொறுத்தே சிறந்த முறையிலும், நலிந்த முறையிலும் அமைகிறது. எனவே, இவ்வாய்வில் குறிப்பிடப்படும் நகர மாணவர்களின் மொழிச்சூழலை அறிய அவர்கள்தம் பெற்றோரின் கல்விநிலை சோதிக்கப்படுகிறது.

தந்தையர்களின் கல்விநிலை அட்டவணை

ஆரம்பப் பள்ளி	நடுநிலைப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி	மேனிலைப் பள்ளி	பட்டதாரிகள்	கல்வியறிவு அற்றவர்
60%	15%	10%	15%	-	-

தாயின் கல்விநிலை அட்டவணை

ஆரம்பப் பள்ளி	நடுநிலைப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி	மேனிலைப் பள்ளி	பட்டதாரிகள்	கல்வியறிவு அற்றவர்

4.3.2.2. பிள்ளைகளின் கல்விநிலைக் குறித்த கருத்து

தங்கள் பிள்ளைகளின் கல்விநிலை குறித்த வினாவிற்குப் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சுமாராகப் படிப்பதாகவே கூறுகிறார்கள். சிலர் இன்னும் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டும் என்றும், ஆசிரியர் தங்கள் பிள்ளைகளிடம் தனிக்கவனம் செலுத்த வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கின்றனர்.

நன்று	சுமார்
15%	85%

ஆனால் 100% பெற்றோர்களுமே தங்கள் பிள்ளைகளைப் படிக்கச் சொல்லி வற்புறுத்துவதாகவே குறிப்பிடுகின்றனர். அடிக்கடி பள்ளிக்குச் சென்று பிள்ளைகளின் கல்விநிலைக் குறித்து விசாரிப்பதுண்டா? என்ற கேள்விக்கு அவர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட புள்ளியியல் தகவல் கிடைக்கிறது.

விசாரிக்போம்	விசாரிப்பதில்லை
85%	25%

4.3.2.3. பாடம் சொல்லிக்கொடுத்தல்

தங்கள் பிள்ளைகள் வீட்டில் படிக்கும்போது அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுண்டா? என்ற கேள்விக்கு 70% பெற்றோர்கள் "சொல்லிக்கொடுப்போம்" என்றும், தமிழ்மொழியில் அமைந்துள்ள தமிழ், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாடங்களை மட்டும் சொல்லிக் கொடுப்பதாகக் கூறுகின்றனர். எஞ்சிய 30% பெற்றோர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதில்லை என்கின்றனர்.

சொல்லிக் கொடுப்போம்	சொல்லிக் கொடுப்பதில்லை
70%	30%

4.3.2.4. தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தல்

நகரச்சூழலில் பொழுதுபோக்கு ஊடகங்கள் அதிகம். அத்தகைய ஊடகங்களில் தொலைக்காட்சியும் ஒன்று. அத்தொலைக்காட்சிப் பார்ப்பதை 80% பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அனுமதிப்பதில்லை என்று குறிப்பிடுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் அதில் இடம்பெறும் வன்முறை மற்றும் பாலியல் காட்சிகள் ஆகும். ஆனால் 20% பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பார்க்க அனுமதிப்பதாகவும் கூறுகின்றனர். ஏனெனில், தொலைக்காட்சியில் கல்விசார் கருத்துக்களும், சில பொதுஅறிவு நிகழ்ச்சிகளும் நாட்டுநடப்பினை அறிந்து கொள்ளும் செய்திகளும் தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

அனுமதிப்போம்	அனுமதிப்பதில்லை
20%	80%

4.3.2.5. புத்தகம் மற்றும் நாளிதழ் வாங்குதல்

மாணவர்களின் மொழித்திறனுக்கு உறுதுணையாய் விளங்குவன புத்தகங்களும் நாளிதழ்களுமே ஆகும். தங்கள் பிள்ளைகளின் கல்விநிலையில் அக்கறையுடன் செயல்படும்

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மொழியறிவிற்காக ஒருவர்கூட புத்தகங்களோ நாளிதழ்களோ வாங்குவதில்லை என்று குறிப்பிடுகின்றனர்.

4.3.2.6. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து

மேற்கண்ட தகவல்களைத் தந்துதவிய பெற்றோர்களிடம் இறுதியாக தங்கள் பிள்ளைகளின் கல்விநிலை அவர்களது எதிர்காலத்திற்குப் பயனளிப்பதாக உள்ளதா? என்னும் கேள்விக்கு அனைவருமே "ஆம்" என்றே பதிலளித்தனர்.

நன்றாக உள்ளது	இல்லை	சுமார்	கருத்து இல்லை
100%	-	-	-

மேற்கண்ட விவரங்கள் மாணவர்களின் சமூகமாக்கத்தின் ஒரு அங்கத்தினராக விளங்குதம் அவர்கள்தம் பெற்றோர்களிடமிருந்தும் சேகரிக்கப்பட்டன. அவ்விவரங்களின் மூலம் மாணவர்களின் மொழிச் சமூகமாக்கத்திற்கு அவர்கள்தம் பெற்றோரின் பங்களிப்பு என்ன? என்பது பற்றி அறிந்தோம்.

இனி மொழிச் சமூகமாக்கத்தின் உட்கூறுகளாக விளங்கும் எழுதுதல், படித்தல், பேசுதல் போன்றவற்றில் மாணவர்களின் திறனை அறியும்பொருட்டு அவர்களின் தரவுகளை ஆய்வோம்.

4.4. எழுதும் திறன்

மொழிக்கு இருவடிவங்கள் உண்டு. ஒன்று ஒலிவடிவம் மற்றொன்று வரிவடிவமாகும். இவற்றில் வரிவடிவம் எழுதுதல் மற்றும் படித்தல் திறனுக்கு அடிப்படையாக அமைகிறது. படித்தல் திறனுக்கு வரிவடிவத்தை உணர்ந்துகொண்டால் மட்டும் போதும். ஆனால் எழுதும் திறனுக்கு வரிவடிவத்தை உணர்வதோடு அதனை வரைவதற்குரிய (எழுதுவதற்குரிய) திறனும் பெற வேண்டும்.

பொதுவாகப் பேச்சுமொழியறிவைப் பெற்று வருகின்ற மாணவர்களுக்கு நிலைபெறு மொழியிலும் எழுத்து மொழியிலும் திறன்களை வளர்ப்பதற்கு அவர்களுடைய பள்ளிக்கூடமே களமாக அமைகிறது. இவ்வாறு ஒரு மொழியில் மேற்கண்ட திறன்களை அறிய பல மதிப்பீட்டு நெறிமுறைகள் இருக்கின்றன. அதில் ஒன்று பிழைஆய்வு என்பதாகும்.

4.4.1. பிழைஆய்வு

பொதுவாகப் பிழைகள் இலக்கணக் கூறுகளில் மொழியறிவின்மை, கவனச்சிதைவு பொன்ற காரணங்களாலேயே ஏற்படுகின்றன. இப்பிழைகளே மாணவர்களின் கல்வித்தரத்தைப் பறைசாற்றுவனவாய் அமைகின்றன. இங்கு தமிழ்வழியில் பயின்று தமிழையே முதன்மைப் பாடமாகப் பயிலும் கிராம மற்றும் நகர்ப்புற மாணவர்கள் செய்யும் பிழைகள் தரவுகளின் மூலம் உற்றுநோக்கப்பட்டு ஆயப்பட்டுள்ளன.

4.4.2. பிழைகளின் பாகுபாடு

பிழைகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யலாம்:

1.எழுத்துப் பிழைகள்
2.சொற்பிழைகள்
3.வாக்கியப் பிழைகள்
4.புணர்ச்சிப் பிழைகள்
5.பொருளுணர்ப் பிழைகள்

மொழியியல் அடிப்படையில் இதனைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1.ஒலியனியல் பிழைகள்
2.உருபனியல் பிழைகள்
3.தொடரியல் பிழைகள்
4.பொருண்மையியல் பிழைகள்

4.5. நகர்ப்புற மாணவர்களின் தரவுகளிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகள்

மாணவர்களின் மொழித்திறன் அல்லது எழுத்துத்திறனைக் கண்டறிவதற்கு அவர்களுக்கு வினாநிரல் மற்றும் கேட்டெழுதுதல் (Dictation), தாமே எழுதுதல் போன்ற நெறிமுறைகளின் அடிப்படையில் தரவுகள் திரட்டப்பட்டன. வினாநிரலில் அவர்களின் மனநிலையை அறியும்விதமான சுமார் 50 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. கேட்டெழுதுதல் முறையில் மாணவர்களுக்கு அவர்களுடைய தமிழ்ப்பாடநூலில் முதற்பாடமாக அமைந்த "தமிழ்க் காப்பியங்கள்" என்னும் பாடத்திலிருந்து சில பகுதிகள் ஆய்வாளரால் வாசிக்கப்பட்டு எழுத்துவிக்கப்பட்டன. அடுத்ததாகத் தாமாக எழுதுதல் முறையில் மாணவர்களுடைய சொற்களஞ்சியத்தை அறியும் பொருட்டு அவர்களுக்கு மிகவும் அறிமுகமான விழாக்களான தீபாவளி, பொங்கல் பற்றியும் என் குடும்பம் எனும் தலைப்பில் அவர்கள்தம் குடும்பத்தைப் பற்றியும் எழுதச் சொல்லப்பட்டது. இத்தகைய எழுத்து முறைகளில் அவர்கள் செய்த பிழைகளை இனிக் காணலாம்.

4.5.1. வினாநிரலில் கண்டறியப்பட்ட பிழைகள்

மாணவர்களிடம் வினாநிரல் மூலம் திரட்டப்பட்ட தரவுகளில் அவர்கள் செய்த பிழைகள் கண்டறியப்பட்டன. அவை கீழ்க்கண்டவாறு இனம்பிரித்து பட்டியலிடப்படுகின்றன.

4.5.1.1. எழுத்துப் பிழைகள்

பொதுவாக மாணவர்களுக்கு ஏற்படும் எழுத்துப் பிழைகள் கீழ்க்கண்ட வகையிலேயே ஏற்படுகின்றன.

குறில் - நெடில்

ன - ண

ர - ற

ழ – ள – ல

இனி இவற்றின் அடிப்படையில் கண்டறிந்த பிழைகளைப் புள்ளியியல் அடிப்படையில் காணலாம்.

குறில் - நெடில் வேறுபாட்டில் அமைந்த எழுத்துப்பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
போரடியவர்	போராடியவர்	அ<ஆ
அண்	ஆண்	அ<ஆ
பன்னிர்	பன்னீர்	இ<ஈ
எழம்வகுப்பு	ஏழாம்வகுப்பு	அ<ஆ
படிப்பன்	படிப்பான்	அ<ஆ
அசிரியர்	ஆசிரியர்	அ<ஆ
பட்டு	பாட்டு	அ<ஆ
தீவ்யா	திவ்யா	ஈ<ஆ
பாடம்	படம்	ஆ<அ
நாடனம்	நடனம்	ஆ<அ
கந்தி	காந்தி	அ<ஆ
தாங்கை	தங்கை	ஆ<அ
பர்ப்பேன்	பார்ப்பேன்	அ<ஆ
நகரட்சி	நகராட்சி	அ<ஆ
படல்	பாடல்	அ<ஆ
சுவாமிநாதான்	சுவாமிநாதன்	ஆ<அ
படிப்பென்	படிப்பேன்	எ<ஏ

மேற்கண்ட குறில் - நெடில் எழுத்துப் பிழைகளில் ஒரே பிழையைப் பலரும் செய்திருந்தனர். இப்பிழை ஆய்வைப் பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



ல – ள – ழ வேறுபாட்டில் அமைந்த எழுத்துப்பிழைகளின் அட்டவணை

மாணவர்கள் ல-ள-ழ வேறுபாட்டை அறியாமல் பிழைகளைச் செய்கின்றனர். இவ்வெழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த பிழைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
கல்லர்	கள்ளர்	ல்<ள்
செய்வால்	செய்வாள்	ல்<ள்
எழிமையான	எளிமையான	ழ்<ள்
பணியாலர்	பணியாளர்	ல்<ள்
படிப்பால்	படிப்பாள்	ல்<ள்
வெள்ளாலர்	வெள்ளாளர்	ல்<ள்
நெசவாலர்	நெசவாளர்	ல்<ள்
தமிள்	தமிழ்	ள்<ழ்

50% மாணவர்களே மேற்கண்ட பிழைகளைச் செய்திருந்தனர். மீதமுள்ள மாணவர்கள் முற்றிலும் சரியாக எழுதியிருந்தனர். இப்பிழைகளுடன் எழுதிய 50% மாணவர்களில் 40%

மாணவர்களுக்கு **ல்<ள்** வேறுபாட்டுப் பிழைகளும், 10% மாணவர்களுக்கு **ழ்<ள்** வேறுபாட்டுப் பிழைகளும் ஏற்பட்டன.



ர-ற வேறுபாட்டிலமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
திரமை	திறமை	ர<ற
நன்ராக	நன்றாக	ர<ற
போறாடினார்	போராடினார்	ற<ர

இத்தகைய பிழைகள் 30% மாணவர்களிடம் காணப்பட்டது. ஒருவர் செய்த பிழையையே 30% மாணவர்களும் செய்திருந்தனர்.

ந-ன-ண வேறுபாட்டிலமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
நண்றாக	நன்றாக	ண<ன
அண்னண்	அண்ணன்	ன<ண

ரானுவவீரர்	ராணுவவீரர்	ன<ண
படிப்பேண்	படிப்பேன்	ண<ன
கனக்கு	கணக்கு	ன<ண
சாதணை	சாதனை	ண<ன
கொத்தணார்	கொத்தனர்	ண<ன
உன்டு	உண்டு	ன<ண
ரேனுகா	ரேணுகா	ன<ண
பென்	பெண்	ன<ண

இத்தகைய வேறுபாட்டிலான பிழைகள் 50% மாணவர்களிடம் முழுமையாகவே காணப்பட்டது. இதிலும் ஒரே பிழையை அனைவரும் செய்திருந்தனர்.

4.5.1.2. சொற்பிழைகள்

இப்பிழைகள் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளால் சொற்கள் முழுவதும் சிதைவுற்றதை வெளிப்படுத்துகிறது.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
படிப்பொம்	படிப்பேன்	ஓம்<ஏன்
விகடம்	விகடன்	ம்<ன்
பிற்படுத்தப்பட்டேள்	பிற்படுத்தப்பட்டோர்	ஏள்<ஓர்
காமெடிட்சி	காமெடிகாட்சி	Ø<கா
செரளாஸ்ரா	செரளாஸ்ட்ரா	Ø<ட்ரா
ஆரியர்	ஆசிரியர்	Ø<சிரியர்

இப்பிழையை 50% மாணவர்கள் செய்திருந்தனர். ஒரே பிழையை ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

4.5.1.3. வாக்கியப்பிழை

வினாநிரலில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு வாக்கியஅமைப்பில் எந்த விடையும் அமையாததால் இவ்விடத்தில் வாக்கியப்பிழைக் கண்டறியப்படவில்லை.

4.5.2. கேட்டெழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்

கேட்டெழுதுதல் முறையில் எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை முதலான பிழைகள் கண்டறியப்பட்டு அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

4.5.2.1. எழுத்துப்பிழைகள்

குறில் - நெடில் வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
தொன்றிய	தோன்றிய	ஒ<ஓ
சுளாமணி	சூளாமணி	உ<ஊ
சூளமணி	சூளாமணி	அ<ஆ
நொக்கி	நோக்கி	ஒ<ஓ
மெழி	மொழி	எ<ஒ
கப்பியம்	காப்பியம்	அ<ஆ
கவியம்	காவியம்	அ<ஆ
சதனை	சாதனை	அ<ஆ
அழைத்தனார்	அழைத்தனர்	ஆ<அ
குறின	கூறின	உ<ஊ
வழ்வின்	வாழ்வின்	ஆ<அ
உருவயின	உருவாயின	அ<ஆ
நிலாகெசி	நீலகேசி	இ<ஈ/எ<ஏ

நகுமர கவியம்	நாகுமாரகாவியம்	அ<ஆ/அ<ஆ
அகியன	ஆகியன	அ<ஆ
பேருமை	பெருமை	ஏ<எ

மேற்கண்ட குறில்-நெடில் வேறுபாட்டுப் பிழைகளை 70% மாணவர்கள் செய்திருந்தனர்.

ல –ள – ழ வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
பலமையான	பழமையான	ல்<ழ்
செய்யுல்கள்	செய்யுள்கள்	ல்<ள்
சூழாமணி	சூளாமணி	ழ்<ள்
வலையாபதி	வளையாபதி	ல்<ள்
உல்ல	உள்ள	ல்<ள்
முலுவரலாறு	முழுவரலாறு	ல்<ழ்
பாடள்கள்	பாடல்கள்	ள்<ல்
அளைத்தனர்	அழைத்தனர்	ள்<ழ்
அலைத்தனர்	அழைத்தனர்	ல்<ழ்
மணிமேகளை	மணிமேகலை	ள்<ல்
காப்பியங்கல்	காப்பியங்கள்	ல்<ள்
வலமிக்க	வளமிக்க	ல்<ள்
நிகல்ச்சி	நிகழ்ச்சி	ல்<ழ்
காளம்	காலம்	ள்<ல்
புலவர்கலால்	புலவர்களால்	ல்<ள்

மேற்கண்ட வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 80% மாணவர்கள் செய்திருந்தனர். அப்பிழைகளின் வேறுபாட்டு விழுக்காடு பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



ர – ற வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
உணற்சி	உணர்ச்சி	ற<ர
கூரின	கூறின	ர<ற
பிறித்து	பிரித்து	ற<ர
வேருசில	வேறுசில	ர<ற
உறுவாயின	உருவாயின	ற<ர
ஐம்பெறுங்காப்பியம்	ஐம்பெருங்காப்பியம்	ற<ர
ஐஞ்சிருகாப்பியம்	ஐஞ்சிறுகாப்பியம்	ர<ற
அறிய	அரிய	ற<ர
பெறுமை	பெருமை	ற<ர
பிர்காலம்	பிற்காலம்	ர<ற

மேற்கண்ட ர – ற வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 60% மாணவர்கள் செய்திருந்தனர்.

ன – ண வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
பன்டை	பண்டை	ன<ண
குன்டலகேசி	குண்டலகேசி	ன<ண
மனிமேகலை	மணிமேகலை	ன<ண
உதயன.....	உதயண	ளன<ண
இனைந்து	இணைந்து	ன<ண
வருனித்தன	வருணித்தன	ன<ண
உனர்ச்சி	உணர்ச்சி	ன<ண
வெளிவந்தண	வெளிவந்தன	ண<ன

80% மாணவர்களுக்கு இத்தகைய ன – ண வேறுபாட்டுப் பிழைகள் காணப்பட்டன.

4.5.2.2. சொற்பிழைகள்

இப்பிழைகள் ஒன்றிற்கு மேற்பட்ட எழுத்துப்பிழைகளால் சொல்லானது முழுவதும்சிதைவுறுதலை வெளிப்படுத்தும்.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
தொண்டின	தோன்றின	ன்ற்>ண்ட்
உருவாய்னர்	உருவாயின	யின>யினர்
யோசோதர.....	யசோதர	யோ>ய
உதையன	உதயன	தை>த
வருதித்தன	வருணித்தன	ணித்>தித்
கிவியம்	காவியம்	கி>கா
சிலமனி	சூளாமணி	சில>சூளா
ஐச்சிறுகாப்பியம்	ஐஞ்சிறுகாப்பியம்	ஐஞ்>ஐச்
ஐன்சிறுகாப்பியம்	ஐஞ்சிறுகாப்பியம்	ஐன்>ஐஞ்

ராககுமார.....	நாககுமார	ராக>நாக

முற்றிலும் பொருள் மாறுபடும் இத்தகைய சொற்பிழைகள் 90% மாணவர்களிடம் காணப்பட்டது. எஞ்சிய மாணவர்கள் எந்தப் பிழைகளும் இன்றி திருத்தமாக எழுதியிருந்தனர்.

4.5.2.3. வாக்கியப் பிழைகள்

ஒன்றிற்கு மேற்பட்ட சொற்களை உடையது வாக்கியம். இத்தகைய வாக்கியங்களைப் பிழைகளுடன் எழுதுவது வாக்கியப்பிழை எனப்படும். இப்பிழைகளை சுமார் 40% மாணவர்கள் செய்திருந்தனர்.

பிழைவாக்கியம்	திருத்தம்
செய்யுல்கள் உருவய்னர்	செய்யுள்கள் உருவாயின
புலவர்குளல் வழப்பெற்றன	புலவர்களால் பாடப்பெற்றன
நூற்றுக்கும் மெர்பெற்ற	நூற்றுக்கும் மேற்பட்ட
வரலற்றை செழலும்	வரலாற்றைச் சொல்லும்
தெகைனுழ்க பிர்ககள...	தொகைநூல்களாகப் பிற்கால...
வல்லின் அறிய சானையை	வாழ்வின் அரிய சாதனையை

4.5.2.4.ஒற்றுப்பிழைகள்

பல சொற்கறை அடுக்கி எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது மட்டுமே அம்மொழியைக் கற்பது என்பதாகாது. எந்த மொழியாயினும் அம்மொழிக்கு உரிய இலக்கணத்தோடு கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் மொழிநூலாசிரியர் **ஆட்டோ யெஸ்பர்சன்**. இலக்கணவாதிகள் குறிப்பிடும் இலக்கணவிதிகளில் ஒற்றுக்களும் அடங்கும். இலக்கணவியலார் இதனை வலிமிகுதல்-வலிகெடுதல் என்று கூறுவர். மாணவர்களுடைய பிழைஆய்வில் இவ்வொற்றுப்பிழை ஆய்வும் உட்படுகிறது.

இங்கு நகர்ப்புற மாணவர்களின் தரவுகளில் வலி மிகவேண்டிய இடங்களில் மிகாமலும், மிகாத இடங்களில் மிகுத்தும் எழுதிய ஒற்றுப்பிழைகளைக் காணலாம்.

பிழை	திருத்தம்	மாற்றம்
தமிழ்ழில்	தமிழில்	ழ்>ø
பண்டை காலம்	பண்டைக்காலம்	ø>க்
பகுதிகளை கூறின	பகுதிகளைக் கூறின	ø>க்
பாடல்களை பாட்டு	பாடல்களைப் பாட்டு	ø>ப்
எட்டுதொகை	எட்டுத்தொகை	ø>த்
பத்துபாட்டு	பத்துப்பாட்டு	ø>ப்
மிகமிக பழமையான	மிகமிகப் பழமையான	ø>ப்
வரலாற்றை சொல்லும்	வரலாற்றைச் சொல்லும்	ø>ச்
முதன்முதலாகசிலப்பதிகாரம்	முதன்முதலாகச்சிலப்பதிகாரம்	ø>ச்
அப்பாடல்களை தொகுத்து	அப்பாடல்களைத்தொகுத்து	ø>த்
தொகைநூல்களாக பிற்கால புலவர் அமைத்தனர்	தொகைநூல்களாகப்பிற்காலப் புலவர் அமைத்தனர்	ø>ப் ø>ப்

இவ்வொற்றுப்பிழைகள் 100% மாணவர்களிடமுமே காணப்பட்டது.

4.5.2.5. நிறுத்தற்குறிகள்

நிறுத்தற்குறிகள் என்பது காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள் குறிகள் முதலானவற்றை உள்ளடக்கும். இத்தகைய நிறுத்தற்குறிகளை நகர்ப்புற மாணவர்களின் தரவுகளில் கையாளப்பட்டுள்ள விதங்களை இனிமேற் காணலாம்.

4.5.2.5.1. காற்புள்ளி

ஒரே தன்மையுடைய வெவ்வேறான அலகுகளைத் தனித்தனியே இனம் காண்பதற்கு இத்தகைய காற்புள்ளிக் குறியீடு பயன்படுத்தப் படுகிறது. இக்குறியீடுகளை 25% மாணவர்களே

முழுமையாகப் பய்னபடுத்தியுள்ளனர். எஞ்சிய 75% மாணவர்கள் ஒரு இடத்தில்கூட இக்குறியீட்டினை பயன்படுத்தவில்லை. பின்வரும் அட்டவணை இதை உறுதிசெய்யும்.

ஐம்பெருங்காப்பியங்கள் ஐஞ்சிறுகாப்பியங்கள் - ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள்
சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை,
வளையாபதி குண்டலகேசி - வளையாபதி, குண்டலகேசி
சூளாமணி நீலகேசி உதயணகுமார காவியம் - சூளாமணி, நீலகேசி, உதயணகுமார காவியம்
நாககுமாரகாவியம் யசோதரகாவியம் நாககுமாரகாவியம், யசோதரகாவியம்"

4.5.2.5.2. அரைப்புள்ளி

ஒரு செய்தி முற்றுப்பெறாமல் பல தொடர்களில் வருமாயின், அத்தொடர்களின் முடிவில் இக்குறியீட்டினை இடுவர். மாணவர்களுக்கு எழுதுவதற்குக் குறிப்பிடப்பட்ட பகுதியில் இத்தகைய குறியீடு இரண்டு இடங்களில் காணப்பட்டது. ஆனால் ஒரு மாணவர்கூட இக்குறியீட்டினைப் பயன்படுத்தவில்லை. பின்வரும் அட்டவணை இதை எடுத்துக்காட்டும்.

அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தின – அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தின;
சுவைமிக்க நிகழ்ச்சிகளை வருணித்தன - சுவைமிக்க நிகழ்ச்சிகளை வருணித்தன;

4.5.2.5.3. முக்காற்புள்ளி

ஆங்கிலத்தில் colon என்ற சொல்லால் வழங்கப்படும் முக்காற்புள்ளி இப்பகுதியில் எங்கும் சுட்டப்படவில்லை.

4.5.2.5.4. முற்றுப்புள்ளி

ஒரு தொடர் முற்றுப்பெற்றது என்பதையும் தனிப்பட்ட ஒரு வாக்கியம் என்பதையும் உணர்த்தும்விதமாக இம்முற்றுப்புள்ளி பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய முற்றுப்புள்ளியை 35% மாணவர்களே முழுமையாகக் கையாண்டிருந்தனர். 20% மாணவர்கள் ஒவ்வொரு பத்தியின் முடிவில் மட்டும் பயன்படுத்திவிட்டுப் பத்திகளுக்கு இடையில் பயன்படுத்தாமல் இருந்தனர். எஞ்சியவர்கள் தொடக்கம் முதல் இறுதி வரையிலும் இக்குறியீட்டினை பயன்படுத்தவில்லை.

4.5.2.5.5. மேற்கோள்

பிறவற்றிலிருந்து ஒன்றினை வேறுபடுத்திக் காட்ட அல்லது சிறப்பித்துக் காட்ட "மேற்கோள்" குறியீடு பயன்படுத்தப்படுகிறது. மாணவர்கள் எழுதுவதற்குக் கொடுக்கப்பட்ட பகுதிகளில் சில மேற்கோள் பகுதிகள் சுட்டப்பட்டிருந்தன. ஆனால் ஒரு சதவிகித மாணவர்கள்கூட அக்குறியீட்டினைப் பயன்படுத்தவில்லை.

எ.கா

எட்டுத்தொகை	"எட்டுத்தொகை"
பத்துப்பாட்டு	"பத்துப்பாட்டு"
பாட்டு	"பாட்டு"
காப்பியங்கள்	"காப்பியங்கள்"
ஐம்பெருங்காப்பியம்	"ஐம்பெருங்காப்பியம்"
ஐஞ்சிறுகாப்பியம்	"ஐஞ்சிறுகாப்பியம்"

4.5.2.5.6. எழுதிய மாணவர்களின் விழுக்காடு

கேட்டெழுதுதல் முறையில் ஏற்படும் பிழைகள் கண்டறியப்பட்டன. இக்கேட்டெழுதுதல் முறையில் ஆய்வாளரால் வாசிக்கப்பட்ட பகுதிகளை அனைத்து மாணவர்களும் எழுதினார்களா என்பதைப் பின்வரும் அட்டவணைக் காட்டும்:

முழுவதும் சரியாக எழுதியவர்கள்	சிறிது பிழையாக எழுதியவர்கள்	முழுவதுமே பிழையாக எழுதியவர்கள்	ஒன்றுமே எழுதாதவர்கள்
20%	25%	20%	25%

4.5.3. தாமாக எழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்

இம்மாணவர்கள் தாமாகச் சிந்தித்து கதையோ, கவிதையோ, கட்டுரையோ எழுதும் திறனற்றவர்கள் எனும் கணிப்பின் அடிப்படையில் அவர்களுக்கு மிகவும் அறிமுகமான திருவிழாக்களான "தீபாவளி" அல்லது "பொங்கல்" பண்டிகையை அவர்கள் அறிந்தவாறு எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இவ்விரண்டு தலைப்புகளிலும் எழுதத்தெரியாது என்று கூறிய மாணவர்களுக்கு "என்குடும்பம்" எனும் தலைப்பில் எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட தலைப்புகளில் முழுமையாக எழுதியோர் 20%; எஞ்சிய 80% மாணவர்கள் முழுமைப்படுத்தாமல் எழுதியிருந்தனர். அதிலும் 30% மாணவர்கள் அதிக அளவிலான பிழைகளுடன் எழுதியிருந்தனர். மேலும் 20% மாணவர்கள் முழுவதுமாகவே தவறாக எழுதியிருந்தனர். மீதமுள்ள 30% மாணவர்கள் ஒன்றுமே எழுதாத வெற்றுத்தாளையோ திருப்பிக் கொடுத்தனர்.

முழுமையாக எழுதியவர்கள்	பிழைகளுடன் எழுதியவர்கள்	முற்றிலும் தவறாக எழுதியவர்கள்	ஒன்றுமே எழுதாதவர்கள்
20%	30%	20%	30%

4.5.3.1. எழுத்துப் பிழைகள்

இம்முறையில் கண்டறிந்த எழுத்துப்பிழைகள் இனம்பிரித்து கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

குறில் - நெடில் பிழைகளின் அட்டவணை

பிழை	திருத்தம்	மாற்றம்

கலையில்	காலையில்	அ<ஆ
தர்க	தர்கா	அ<ஆ
சந்தி	சாந்தி	அ<ஆ
பாடம்	படம்	ஆ<அ
அடைகள்	ஆடைகள்	அ<ஆ
சமி	சாமி	அ<ஆ
பெசி	பேசி	எ<ஏ

இத்தகைய குறில்-நெடில் பிழைகள் 80% மாணவர்களிடம் காணப்பட்டது.

ழ – ல – ள பிழைகளின் அட்டவணை

பிழை	திருத்தம்	மாற்றம்
கொழித்தி	கொளுத்தி	ழ<ள
காளையில்	காலையில்	ள<ல
கூளி	கூலி	ள<ல
குலித்து	குளித்து	ல<ள
வெலியில்	வெளியில்	ல<ள
மேள்நிலை	மேல்நிலை	ள<ல
களர்	கலர்	ள<ல

இத்தகைய ல-ள-ழ வேறுபாட்டிலான பிழைகள் 85% மாணவர்களிடம் காணப்பட்டது.

ர – ற பிழைகளின் அட்டவணை

பிழை	திருத்தம்	மாற்றம்
படிக்கிரான்	படிக்கிறான்	ர<ற
தற்கா	தர்கா	ற<ர

ந - ன – ண வேறுபாட்டிலமைந்தப் பிழைகள்

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
என்னெய்	எண்ணெய்	ன<ண
துனிகள்	துணிகள்	ன<ண
அனிவேன்	அணிவேன்	ன<ண
மனி	மணி	ன<ண
செல்வேண்	செல்வேன்	ண<ன
போவேண்	போவேன்	ண<ன
கண்று	கன்று	ண<ன
சந்தணம்	சந்தனம்	ண<ன

மேற்கண்ட ந-ன-ண அடிப்படையிலான பிழைகள் 60% மாணவர்களிடம் காணப்பட்டன.

இதுவரையிலும் கண்டறியப்பட்ட எழுத்துப்பிழைகள் 100% மாணவர்களின் தரவுகளிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன. முழுமையாக எழுதியிருந்த மாணவர்கள் சிறிதளவு பிழைகளுடனும், முழுமையாக எழுதாத மாணவர்கள் அதிகளவு பிழைகளுடனும் எழுதியிருந்தனர். முற்றிலுமாக தவறாக எழுதியிருந்த மாணவர்களின தரவுகளிலிருந்து மேற்கண்ட எழுத்துப்பிழைகள் எடுக்கப்படவில்லை. ஏனெனில் அதில் ஒரு வார்த்தைக் கூட சரியாக எழுதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சரியாகவும் பிழைகளுடனும் எழுதிய மாணவர்களில் 60% மாணவர்களுக்கு இத்தகைய ர-ற வேறுபாட்டிலான பிழைகள் ஏற்படலாயிற்று.

4.5.3.2. சொற்பிழைகள்

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப் பிழைகளால் ஆன இப்பிழைகளால் சொல்லானது முற்றிலும் சிதைவிற்கு உள்ளாகும். என்பதனைப் பின்வரும் அட்டவணைக் காட்டும்.

பிழை	திருத்தம்	மாற்றம்
மட்தப்பு	மத்ததாப்பு	ட்த்<த்த்

பாப்பிட்டு	சாப்பிட்டு	ப்<ச்
கழுவிட்டு	கழுவிவிட்டு	ழ்வ்வ்<ழ்வ்
சொய்ரங்கா	செய்றாங்க	ய்ர்<ய்ற்
எண்ணை	எண்ணெய்	ண்ஐ<ண்எய்
வளாக்கிட்டு	விளக்கிட்டு	ஆ<இஅ
கமிமத்தப்பு	கம்பிமத்தாப்பு	ம்ப்<ம்ம்
பார்ப்போன்	பார்ப்பேன்	ப்ஓ<ப்ஏ
செல்பேன்	செல்வேன்	ல்ப்<ல்வ்
தெழுவேன்	தொழுவேன்	த்எ<த்ஒ
பெட்டுக்குவேன்	போட்டுக்குவேன்	ப்எ<ப்ஒ

மேற்கண்ட சொற்பிழைகள் 90% மாணவர்களிடம் காணப்பட்டது.

4.5.3.3. வீட்டு (பேச்சு) வழக்குச் சொற்கள்

சில நேர்வுகளில் மாணவர்கள் தாங்கள் பேசும் பேச்சு வழக்கினை அப்படியே எழுதியிருந்தனர். அப்பேச்சு வழக்கும் அதனுடைய திருந்திய வழக்கும் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:

பேச்சு வழக்கு	திருந்திய வழக்கு
எந்திரிச்சி	எழுந்து
பலவாரங்கள்	பலகாரங்கள்
போட்டுக்குவேன்	அணிந்துகொள்வேன்
குடுப்பேன்	கொடுப்பேன்
எய்த்த வீடு	எதிர்வீடு
பாப்பேன்	பார்ப்பேன்
படிக்கிறான்	படிக்கின்றான்
எல்லாம்	எல்லோரும்
குளிச்சிட்டு	குளித்துவிட்டு
தேச்சி	தேய்த்து

வெடிச்சிட்டு	வெடித்துவிட்டு
எழுந்திரிச்சி	எழுந்து

இத்தகைய பேச்சு வழக்குச் சொற்களை 80% மாணவர்கள் அதிக அளவில் கையாண்டிருந்தனர். 20%மாணவர்கள் சில இடங்களில் மட்டும் கையாண்டிருந்தனர்.

4.5.3.4. வாக்கியப்பிழை

முற்றிலும் தவறாக எழுதியிருந்த மாணவர்களின் தரவுகளிலிருந்து அதிகமாள வாக்கியப்பிழைகள் கண்டறியப்பட்டன. பின்வரும் அட்டவை இதை உறுதிசெய்யும்.

பிழை	திருத்தம்
தற்கவுக்கு செல்பேன்	தர்காவிற்குச் செல்வேன்
குளிச்சி சமிக்கும்பிடுவென்	குளித்துவிட்டு சாமி கும்பிடுவேன்
கலையில் எந்திரிப்போன்	காலையில் எழுவேன்
குளிர்த்துட்டு	குளித்துவிட்டு
கோழித்தி சந்தோஷ்சமாக	கொளுத்தி சந்தோசமாக
பட்டசு வெடிச்சிட்டு	பட்டாசு வெடித்துவிட்டு

இதுவரையிலும் மாணவர்களுடைய எழுத்துத் திறனில் கண்டறியப்பட்ட பிழைகள் பலவாறாகப் பகுத்தாய்வு செய்யப்பட்டதை மேற்கண்ட அட்டவணைகளின் மூலம் கண்டோம். இனி மாணவர்களுடைய பேச்சு மற்றும் வாசிப்புத்திறனை சோதித்தறியும் வகையில் சேகரிக்கப்பட்ட தரவுகளில் ஆயலாம்.

4.5.4. வாசித்தல் திறன்

மாணவர்களின் வாசிப்புத்திறனைச் சோதித்தறிய அவர்களுடைய பாடநூலிலிருந்து சில செய்யுள் பகுதிகளும் உரைநடைப் பகுதிகளும் மாணவர்களால் வாசிக்கப்பட்டு, அவை ஒலிநாடாவில் (Tape Tecorder) பதிவு செய்யப்பட்டன. இத்தகைய தரவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அனைத்து மாணவர்களிடமும் சேகரிக்கப்படவில்லை என்பது

குறிப்பிடத்தக்கது. ஏனெனில் பாடநூலை வாசிப்பதற்கு 25% மாணவர்களே முன்வந்தனர். எஞ்சிய மாணவர்கள் பயம் மற்றும் மொழியறிவின்மை காரணமாக முன்வரவில்லை. எனவே 25% மாணவர்களிடம் மட்டுமே இப்பகுதிக்குத் தேவையான தரவுகள் திரட்டப்பட்டன. அத்தரவுகளிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகள் பகுத்தாயப்பட்டு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

4.5.4.1. எழுத்து உச்சரிப்புப்பிழை

பெரும்பாலான மாணவர்கள் எழுத்து வேறுபாடு தெரியாமலேயே எழுத்துப்பிழைசெய்கின்றனர்.தமிழின் சிறப்பு எழுத்தாகக் கருதப்படும் ழ மற்றும் ல,ள வேறுபாட்டிலேயே பிழையைச் செய்கின்றனர்.

செய்யுள் பகுதி உச்சரிப்புப் பிழை அட்டவணை

பிழை	திருத்தம்	மாற்றம்
பலமொலி	பழமொழி	ல<ழ
மகிலாதே	மகிழாதே	ல<ழ
அலற்கதிராய்	அழற்கதிராய்	ல<ழ
கொலுங்கொடி	கொழுங்கொடி	ல<ழ
விலுந்த வல்லி	விழுந்த வள்ளி	ல<ழ, ல<ள
கிலங்கு	கிழங்கு	ல<ழ
பலம்	பலும்	ல<ழ
பிலிந்த	பிழிந்த	ல<ழ
கொலுஞ்சாறு	கொழுஞ்சாறு	ல<ழ
பசுந்தலை	பசுந்தழை	ல<ழ
செலுந்தினை	செழுந்தினை	ல<ழ
எலுந்து	எழுந்து	ல<ழ
மொலிதல்	மொழிதல்	ல<ழ
மொலி	மொழி	ல<ழ
கலுகினமும்	கழுகினமும்	ல<ழ

இச்செய்யுள்பகுதியில் இடம்பெற்ற பாடல்வரிகளை வாசித்த மாணவர்களுக்குப் பொதுவாகத் தமிழில் உள்ள சிறப்பெழுத்தாகிய ழ-கர உச்சரிப்பு முற்றிலும் தவறாகவே அமைந்தது. அனைத்து மாணவர்களுமே இதே பிழையைச் செய்திருந்தனர்.

உரைநடைப்பகுதி உச்சரிப்புப் பிழை அட்டவணை

பிழை	திருத்தம்	மாற்றம்
நாகாக்கா	நாகாக்க	ஆ<அ
கங்கதாரதிலகர்	கங்காதரதிலகர்	ஆ<அ
முலங்கினார்	முழங்கினார்	ல<ழ
சார் வால்டர்	சர் வால்டர்	ஆ<அ
சுவிச்சார்லந்து	சுவிட்சர்லாந்து	ச்ச்<ட்ச்
கலகம்	கழகம்	ல<ழ
பொர்லின்	பெர்லின்	எ<ஒ
சொற்பொலிவு	சொற்பொழிவு	ல<ழ
நகையுள்ளம்	நகையுள்ளும்	அ<உ
காலை	கலை	ஆ<அ
சொல்லாமல்	செல்லாமல்	ஒ<எ

உரைநடைப் பகுதியை வாசித்த 25% மாணவர்களில் 15% மாணவர்கள் பிழைகளின்றியும் எஞ்சிய 10% மாணவர்கள் குறில்-நெடில் பிழையுடனும் பல்வேறு எழுத்துப் பிழைகளுடனும் வாசித்தனர்.

4.5.5. பேசும் திறன்

மாணவர்களுடைய பேசும்திறனைச் சோதிப்பதற்காக அவர்களிடம் ஏதேனும் பேசக் கேட்டபோது ஒருவரும் பேசுவதற்கு முன்வரவில்லை. ஏதேனும் கதையோ, அல்லது விளையாட்டையோ பற்றி சொல்லுமாறு கேட்டபோது ஒருவருமே சொல்லுவதற்கு முன்வரவில்லை. எனவே அதற்கான தரவுகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை.

4.5.6.பொருளுணர்த்திறன்

மாணவர்களிடம் ஏதேனும் ஒரு செய்யுள் பகுதியையோ அல்லது திருக்குறளையோ வாசித்து பொருள் கூறக் கேட்டபோது அதற்கும் அவர்கள் முன்வரவில்லை. ஆகையால் பொருளுணர்த் திறனைச் சோதிப்பதற்கும் தரவுகள் நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு வாசித்தலுக்கு முன்வந்த சில மாணவர்கள்கூட தேவையான தரவுகள் கொடுப்பதற்கு முன்வரவில்லை. எனவே அத்திறன்களை சோதித்தறியும் தரவுகள் கிடைக்காத காரணத்தால் இப்பகுதி இத்துடன் நிறைவுறுகிறது.

4.6. முடிவுரை

நகர்ப்புற மாணவர்களிடம் திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து அவர்கள் செய்யும் பிழைகளின் அடிப்படையிலேயே அவர்களுடைய மொழித்திறனைக் கண்டறியலாம் எனும் ஊகத்தில் அவர்களுடைய தரவுகளிலிருந்து குறிப்பாகப் பிழைகளை மட்டும் கண்டறிவதற்காகப் பிழைஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவை இப்பகுதியில் விரிவாகவும், தெளிவாகவும் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அவர்களுடைய மொழிச்சமூகமாக்கத்திற்கு உறுதுணையாக விளங்கும் அவர்களுடைய பெற்றோர் மற்றும் ஆசிரியரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளும் இப்பகுதியில் அட்டவணைப்படுத்தப்பட்டு பொருள்கோள் செய்யப்பட்டுள்ளன.

இயல் 5

கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம்

5.0 முன்னுரை

மொழிச்சமூகமாக்கத்தின் கூறுகளாக விளங்கும் படித்தல், எழுதுதல், பேசுதல் மற்றும் வாசித்தல் திறன்களில் கிராமப்புற மாணவர்கள் எந்த அளவிற்கு வெற்றிப்பெற்றுள்ளனர் என்பதையும் பெர்ன்ஸ்டைன் குறிப்பிடும் விரிக்கப்பட்டட மற்றும் எல்லைக்குட்பட்ட குறியங்கள்

அடிப்படையில் எந்த அளவிற்குத் தனிப்பட்டு நிற்கின்றனர் என்பதையும் ஆய்வதே இப்பகுதியின் நோக்கமாகும். கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம் எந்த அளவிற்கு வெற்றியடைந்துள்ளது என்பதை விளக்குவதாக இப்பகுதி அமையும்.

5.1. கிராமப்புற மாணவர்கள்

கிராமச் சூழலில் வாழ்ந்து வரும் மாணவர்கள் அனைவரும் பள்ளியில் நிலைபெறு மொழியினைப் பயின்று வந்தாலும் அவர்களது வீட்டில் பேசும்மொழி சாதி மற்றும் சமுதாய அடிப்படையில் வேறுபடுகிறது. அத்தகைய வேறுபாட்டின் அடிப்படையிலான இடர்பாடுகளை அவர்கள் பள்ளியில் பயிலும் நிலைபெறுமொழியின் உதவியாலும் அவர்களிடையே நிலவும் மக்கள் தகவல் தொடர்பு ஊடகங்களின் உதவியாலும் வெற்றிகண்டு சமூகமாக்கம் அடைகின்றனர்.

5.2 ஆய்வுக்களம்

தஞ்சையிலிருந்து வடுவூர்-மன்னார்குடி சாலையில் சுமார் 20 கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது "**பனையக்கோட்டை**" எனும் கிராமம். இவ்வூரில் பல்வேறு சமூகத்தைச்சேர்ந்த சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இவ்வூரின் மத்தியில் யாவருக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்திருப்பது "**பனையக்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி**" இப்பள்ளியில் உள்ளூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து சுமார் 700க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கல்விப் பயின்று வருகின்றனர்.

5.3 பண்பு மாதிரிகள் (தகவல் திரட்டல்)

இப்பள்ளியில் பயிலும் ஏழாம் வகுப்பைச் சார்ந்த 30 மாணவர்கள் இவ்வாய்வின் பண்புமாதிரிகளாகத் தேர்வு செய்யப்பட்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் வினாநிரல், எழுத்துமுறை மற்றும் ஒலிப்பதிவு முறைகளின் மூலம் திரட்டப்பட்டன. கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம் எந்த அளவிற்கு வெற்றிப்பெற்றுள்ளது என்பதைக் கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமையும்;

அச்சமூகமாக்கத்தின் நிறை-குறை என்ன என்பதையும் ஆய்தல் அவசியமாகும். எனவே இப்பகுதியில் மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்திற்கு அவர்கள்தம் பெற்றோரும் ஆசிரியரும் அடிப்படைக் காரணிகளாக விளங்குவதால் அவர்களிடமும் வினாநிரல் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

5.3.1 ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்

பொதுவாகவே மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்தில் அதிகப்பங்களிப்பு உடையவர் அவர்களுடைய மொழியாசிரியரே என்பது நம்முடைய முந்தைய கணிப்பு. அதன் அடிப்படையில் ஏழாம்வகுப்பு மாணவர்களுக்கு மொழியாசிரியராக விளங்கும் தமிழாசிரியையிடம் மாணவர்களின் கல்விநிலைக் குறித்த சுமார் 26 வினாக்கள் அடங்கிய வினாநிரல் மூலம் மாணவர்களின் கல்விநிலை பரிசோதிக்கப்பட்டது. அத்தரவின் அடிப்படையில் மாணவர்களின் கல்விநிலைக்குறித்து நாம் கீழ்க்கண்ட தகவலை அறியமுடிகிறது.

தொடக்கநிலைவகுப்பு	நடுநிலை வகுப்பு
பரவாயில்லை	நன்று

5.3.2 பெற்றோர்களிடமிருந்து திரட்டப்பட்ட தகவல்கள்

மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்தை நாம் அறிந்துகொள்ள அவர்களுடைய பெற்றோரின் கல்வி, தொழில் மற்றும் சமூகப்பழக்கவழக்கங்கள் அடிப்படையாக அமைகின்றன. இப்போதைய ஆய்விற்காக மாணவர்களின் பெற்றோர்களிடம் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தகவல்கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

5.3.2.1 பெற்றோரின் கல்விநிலை

மாணவர்களுடைய கல்வித்தரத்தை அவர்களுடைய பெற்றோரின் கல்வித்தரத்தைக் கொண்டு ஓரளவு அனுமானிக்க இயலும். இவ்வாய்வில் பண்புமாதிரிகளாகத் தேர்வு செய்யப்பட்ட கிராமப்புற மாணவர்களின் கல்வித்தரத்தை அறிவதற்காக அவர்தம் பெற்றோரின்

கல்வித்தரம் சோதிக்கப்படுகிறது. விவசாயத்தையே பிரதானமாகக் கொண்டிருந்தாரும் கல்விநிலையில் அவர்கள் பின்தங்கவில்லை. அக்கிராமத்தில் 90% மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள்.

தந்தையரின் கல்விநிலை அட்டவணை

கல்வியறிவு அற்றவர்	ஆரம்பப் பள்ளி	நடுநிலைப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி	மேல்நிலைப் பள்ளி	பட்டதாரிகள்
10%	30%	11%	31%	9%	9%

கல்வியறிவு சதவிகிதத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றனர்.

தாயாரின் கல்விநிலை அட்டவணை

கல்வியறிவு அற்றவர்	ஆரம்பப் பள்ளி	நடுநிலைப் பள்ளி	உயர்நிலைப் பள்ளி	மேல்நிலைப் பள்ளி	பட்டதாரிகள்
29%	31%	20%	18%	2%	-

பெற்றோர்களின் கல்விநிலையை அறிந்தோம். இனி அவர்கள்தம் பிள்ளைகளின் கல்விநிலையில் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் கருத்துக்களையும் காணலாம்.

5.3.2.2 பிள்ளைகளின் கல்விலைக்குறித்த கருத்து

தங்களுடைய பணிச்சுமைகளுக்கிடையிலும் பிள்ளைகளின் கல்விநிலையில் அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டுவிளங்கும் பெற்றோர்களிடம் தங்கள் பிள்ளைகளின் கல்விநிலைக்குறித்த வினாவிற்குக் கீழ்க்கண்ட தகவல்கள் கிடைத்தன.

நன்று	சுமார்
65%	35%

பள்ளைகளின் கல்விநிலைக் குறித்து பள்ளிக்குச் சென்று விசாரிப்பதுண்டா? எனும் கேள்விக்கு அவர்களின் பதில்கள் அடிப்படையில் கீழ்க்கண்ட புள்ளியியல் அடிப்படையிலான விவரங்கள் கிடைக்கப்பெற்றன.

விசாரிப்போம்	விசாரிப்பதில்லை
85%	15%

5.3.2.3 பாடம் சொல்லிக் கொடுத்தல்

தங்கள் பிள்ளைகள் வீட்டில் படிக்கும்பொழுது அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதுண்டா? என்று வினவியதற்கு 75% பெற்றோர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதாகவும் எஞ்சிய 25% பெற்றோர்கள் தங்கள் பணிச்சுமை மற்றும் நேரமின்மைக் காரணமாக சொல்லிக் கொடுப்பதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். சொல்லிக்கொடுப்பவர்கள் தாங்கள் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளனர்.

தமிழ்	ஆங்கிலம்	கணிதம்	அறிவியல்	சமூகஅறிவியல்	அனைத்தும்	ஐயவிளக்கம்
15%	5%	15%	5%	5%	20%	10%

5.3.2.4 தொலைக்காட்சி பார்க்க அனுமதித்தல்

கிராமப்புற மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பில் அதிக கவனம் செலுத்துகிறார்கள் என்பதை நாம் முன்னமே அறிந்தோம். அதில் தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. நகர்ப்புற மக்களைப் போலவே கிராமப்புற மக்களையும் தற்போது தொலைக்காட்சித் தன்னகப்படுத்தியுள்ளது. அதிலும் கிராமப்புற மாணவர்களுக்குத் தொலைக்காட்சியைத் தவிர வேறு பொழுதுபோக்கு ஊடகங்கள் இல்லாத காரணத்தினால் மாணவர்கள் தொலைக்காட்சியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இவ்வாறு தொலைக்காட்சி பார்ப்பதற்குத் தங்கள் பிள்ளைகளை

அனுமதிப்பீர்களா என்ற கேள்விக்கு 50% பெற்றோர்கள் அனுமதிப்பதாகக் கூறுகின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் தொலைக்காட்சியில் திரைப்படம் தவிர்த்த சில நல்ல விசயங்களும் இடம்பெறுகின்றன. அதாவது உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வுகளைத் தங்கள் பிள்ளைகள் அறிந்துகொள்வதால் அவர்களுக்கு உலகஅறிவு மற்றும் பொதுஅறிவு முதலியன கிடைக்கப் பெறுகிறது என்கின்றனர். எஞ்சிய 50% மாணவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தொலைக்காட்சிப் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் குறிப்பிடும் காரணங்கள், அதில் இடம்பெறும் வன்முறை மற்றும் பாலியல் குறித்த காட்சிகளால் பிள்ளைகளின் மனநிலை பாதிப்பதோடு அவர்களுடைய படிப்பும் கெடுகிறது என்கின்றனர்.

அனுமதிப்போர்	அனுமதிக்காதோர்
50%	50%

5.3.2.5 புத்தகம் மற்றும் நாளிதழ் வாங்குதல்

பொதுவாகக் கிராமப்புறங்களில் நாளிதழ்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குவோர் மிகக்குறைவே. யாராவது ஊர்ப்பெரியவர்கள் வீடுகளில்தான் நாளிதழ்கள் முதலியன வாங்கப்படும். ஆனால் இப்பொழுது ஊருக்குள்ளேயே சம்பந்தப்பட்ட நாளிதழ் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் நேரடியாகவே கொண்டு செல்வதால் நாட்டுநடப்புகளை அறிய தன் தாய் மொழியில் அமைந்த நாளிதழ் மற்றும் புத்தகங்களையே வாங்குவதாகவும் குறிப்பாக வாங்கும் புத்தகங்களையும் குறிப்பிட்டு கூறியுள்ளனர். அவை கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அறிந்துகொள்ளும் ஆர்வமிகுதியால் கிராமப்புறங்களிலும் இத்தகைய நாளிதழ்களின் பங்கு நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே போகிறது. அந்தவகையில் தங்கள் பிள்ளைகள் நாட்டுநடப்புகளோடு பிற பொதுஅறிவு விசயங்களையும் அறிந்துகொள்வதற்காக நாளிதழ்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குவதாக 50% பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் பெரும்பாலும் தமிழ் மொழியில் அமைந்த நாளிதழ்களையும் பிற இதழ்களையும் வாங்குவதாகக் குறிப்பிடுகின்றனர்.

நாளிதழ்கள் (Newspapers)	இதழ்கள் (Magazines)	பொதுஅறிவு (General	கல்விசார்ந்தவை (Educational)	சமயம்சார்ந்தவை (Spiritual)

		Knowledge)		
20%	12%	7%	8%	3%

மீதமுள்ள 50% பெற்றோர்கள் தாங்கள் எந்த ஒரு நாளிதழையும் இதழையும் வாங்குவதில்லை என்று கூறுகின்றனர். அதற்கு அவர்களது பொருளாதாரமே காரணம் என்று கூறுகின்றனர்.

5.3.2.6 பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து

பிள்ளைகளின் தற்போதைய கல்விநிலை குறித்து அனைத்து பெற்றோர்களும் ஓரளவு நன்றாக இருப்பதாகவே கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் தற்போதைய கல்விநிலை அவர்களது எதிர்காலத்தில் பயனளிக்குமா? என்னும் கேள்விக்கு சிலர் ஏழாம்வகுப்பை மட்டும் வைத்துக் கொண்டு எப்படி கணக்கிடுவியலும் என்ற கேள்வியுடன் இல்லை என்றே பதிலளிக்கின்றனர். அவர்கள் அளித்தத் தகவல்கள் கீழ்க்கண்டவாறு பகுத்தாய்வு செய்து அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

நன்றாக உள்ளது	இல்லை	சுமார்	கருத்து இல்லை
60%	20%	10%	10%

தாங்கள் விவசாயம் பார்த்தாலும் தங்கள் பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லநிலையை அடையவேண்டும் என்பதில் எள்ளளவும் ஆர்வம் குறையாதவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் பிள்ளைகளைச் சிறந்த குடிமகனாக்குவதே தங்கள் கடமை என்றும் கூறியுள்ளனர்.

மாணவர்களின் நலனில் அதிக அக்கறை உடையவர்கள் அவர்களது பெற்றோரே என்பதில் ஐயமில்லை. ஆயினும் கிராமப்புறங்களில் கல்விக்குறித்த விழிப்புணர்வு குறைவாக இருக்கும் என்னும் கணிப்பைப் பொய்யாக்கியது பனையக்கோட்டை கிராமப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுடைய கல்விக் குறித்த அணுகுமுறைகள், கல்விநிலையிலும்

கல்விக்குறித்த விழிப்புணர்விலும் முந்தைய நூற்றாண்டைக் காட்டிலும் இந்த நூற்றாண்டில் கிராமப்புறங்கள் அதீத வளர்ச்சியடைந்துள்ளன என்பதற்கு இத்தரவுகளே சாட்சிகளாக அமைகின்றன.

மேற்கண்ட விவரங்கள் மாணவர்களின் சமூகமாக்கத்திற்கு முக்கிய அங்கத்தினர்களாக விளங்கும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்தன. இனி, மொழிச்சமூகமாக்கத்தின் அடிப்படைக் கூறுகளாக விளங்கும் எழுதும் திறன், படித்தல் திறன், பேசும் திறன் மற்றும் வாசித்தல் திறன்களில் கிராமப்புற மாணவர்களின் நிலைகுறித்து அவர்கள்தம் தரவுகளைக் கொண்டு ஆய்வோம்.

5.3.3 கிராமப்புற மாணவர்களின் தரவுகளிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகள்

கிராமப்புற மாணவர்களின் மொழித்திறனைக் கண்டறிவதில் முற்பகுதியில் குறிப்பிட்டவாறு பிழைஆய்வு முறை கடைபிடிக்கப்பட்டது. அதில் அம்மாணவர்கள் வினாநிரல், கேட்டெழுதுதல், தாமாக எழுதுதல் மற்றும் வாசித்தல் முறைகளில் செய்த பிழைகள் கண்டறியப்பட்டு அவை முறையாக அட்டவணைப்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

5.3.3.1 வினாநிரலில் கண்டறியப்பட்ட பிழைகள்

5.3.3.1.1. எழுத்துப்பிழைகள்

நகர்ப்புற மாணவர்களைப் போன்று கிராமப்புற மாணவர்களுக்கும் எழுத்துப் பிழைகள் ஏற்பட்டன. முதலில் குறில்-நெடில் வேறுபாட்டில் அமைந்த பிழைகளைக் காணலாம்.

குறில்-நெடில் வேறுபாட்டில் அமைந்த எழுத்துப்பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
அங்கிலம்	ஆங்கிலம்	அ<ஆ

நடகம்	நாடகம்	அ<ஆ
அண்	ஆண்	அ<ஆ
திருஞனாம்	திருஞானம்	அ<ஆ,ஆ<அ
குலி	கூலி	உ<ஊ
விவசயம்	விவசாயம்	ஆ<அ
அதனல்	அதனால்	அ<ஆ
நன்றக	நன்றாக	அ<ஆ
படம்	பாடம்	அ<ஆ
படிப்பென்	படிப்பேன்	எ<ஏ
டக்டர்	டாக்டர்	ஆ<அ
நடத்துவர்	நடத்துவார்	அ<ஆ
மினா	மீனா	இ<ஈ
சாமியம்மள்	சாமியம்மாள்	அ<ஆ
அனந்தம்	ஆனந்தம்	அ<ஆ
கவல்துறை	காவல்துறை	அ<ஆ
கந்தி	காந்தி	அ<ஆ
கள்ளார்	கள்ளர்	ஆ<அ
படிப்பங்க	படிப்பாங்க	அ<ஆ
கவால்	காவல்	அ<ஆ,ஆ<அ
கலையாரசி	கலையரசி	ஆ<அ
நான்றாக	நன்றாக	ஆ<அ
விளையடுவேன்	விளையாடுவேன்	அ<ஆ
டிச்சர்	டீச்சர்	இ<ஈ
தோலைக்காட்சி	தொலைக்காட்சி	ஒ<ஒ
படல்	பாடல்	அ<ஆ

மேற்கண்ட குறில்-நெடில் வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 70% மாணவர்கள் செய்திருந்தனர். இவர்களில் அ<ஆ வேறுபாட்டில் அமைந்த பிழைகளைச் சுமார் 45% மாணவர்களும் இ<ஈ வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 10% மாணவர்களும் எ>ஏ வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 5% மாணவர்களும் உ<ஊ வேறுபாட்டில் அமைந்த

பிழைகளை 5% மாணவர்களும் ஒ<ஓ வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 5% மாணவர்களும் செய்திருந்தனர். அதனைக் கீழே தரப்பட்டுள்ளவரைபடத்தால் காட்டலாம்.



ல-ள-ழ வேறுபாட்டில் அமைந்த எழுத்துப் பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
விலையாடுவேன்	விளையாடுவேன்	ல<ள
கிலக்குத்தெரு	கிழக்குத்தெரு	ல<ழ
கிளோமீட்டர்	கிலோமீட்டர்	ள<ல
அம்பழகாரன்	அம்பலகாரன்	ழ<ல
கல்லர்	கள்ளர்	ல<ள
கூழி	கூலி	ழ<ல

ர-ற வேறுபாட்டில் அமைந்த எழுத்துப்பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
அவறுடைய	அவருடைய	ற<ர
படிப்பாற்கள்	படிப்பார்கள்	ற<ர

ந-ன-ண வெறுபாட்டில் அமைந்த எழுத்துப் பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
மேல்னிலைப்பள்ளி	மேல்நிலைப்பள்ளி	ன<ந
பணையக்கோட்டை	பனையக்கோட்டை	ண<ன
நண்றாக	நன்றாக	ண<ன
மணிகண்டண்	மணிகண்டன்	ண<ன
கடிண உழைப்பு	கடின உழைப்பு	ண<ன
திணகரன்	தினகரன்	ண<ன
அணுசியா	அனுசியா	ண<ன
அண்பாக	அன்பாக	ண<ன
அண்ணண்	அண்ணன்	ண<ன

இப்பிழைகளை 50% மாணவர்கள் செய்திருந்தனர்.

5.3.3.1.2 சொற்பிழைகள்

ஒரு சொல்லில் இடம்பெறும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் மாறிவருவதால் அச்சொல்வே முழுமையாகப் பிழையாகிறது. இப்பிழையினால் அச்சொல்லுக்குண்டான பொருள் முழுமையாக மாறும்நிலை ஏற்படுகிறது. இத்தகைக சொற்பிழைகள் கிராமப்புற மாணவர்களிடமிருந்து திரட்டிய தரவுகளில் அதிகளவு காணப்பட்டது . அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
ததிஷ்	சதீஷ்	த<ச,இ<ஈ
சட்டை	சண்டை	ட்<ண்
கேர்ப்பம்	கேப்போம்	ர்ப்<ப்ப்,அ<ஓ

தஞ்வூர்	தஞ்சாவூர்	Ø<சா
அம்பளார்	அம்பளகாரர்	ளார்<ளகாரர்
தெலைகச்சி	தொலைக்காட்சி	எ<ஒ,கச்சி<காட்சி
வடைக்கீத்தெரு	வடக்குத்தெரு	ஐ<அ,ஈ<உ
விலயடுவன்	விளையாடுவேன்	ல<ளை,அ<ஆ
அன்பமாக	அன்பாக	பமாக<பாக
நடுத்துவர்	நடத்துவார்	நடு<நட,வர்<வார்
அம்பலர்	அம்பலகாரர்	Ø<கார
மனோர்மனி	மனோன்மணி	ர்<ன்,ன்<ண்
கிலாக்குத்தெரு	கிழக்குத்தெரு	லா<ழ

இத்தகைய சொற்பிழைகளை 70% மாணவர்கள் செய்திருந்தனர். ஒருவர் செய்த பிழையையே ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

5.3.3.1.3 வாக்கியப்பிழை

முந்தையப் பகுதியில் குறித்தது போலவே வினாநிரலில் வாக்கியஅமைப்பில் விடையளிக்கும் வகையிலான வினாக்கள் கேட்கப்படாமையால் இப்பகுதியில் வாக்கியப்பிழைகள் கண்டறியப்படவில்லை.

இவ்வாறு மேற்கண்ட எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழைகள் மாணவர்களிடமிருந்து வினாநிரலின் மூலம்திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கண்டறியப்பட்டு இனம்வாரியாகப் பிரித்து அட்டவணைப்படுத்தப்பட்டன. இனி கேட்டெழுதுதல் முறையில் கிராமப்புற மாணவர்கள் பிழைகள் அவர்களுடைய தரவுகளின் அடிப்படையில் எவ்வாறு கண்டறியப்பட்டது என்பதை அறிவோம்.

5.3.3.2. கேட்டெழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள்

மாணவர்களுக்கு அவர்தம் பாடப்பகுதியில் இருந்து சிலபகுதிகள் ஆய்வாளரால் வாசிக்கப்பட்டு எழுதச்சொல்லப்பட்டது என்பதை முன்பே அறிந்தோம். அவ்வாறு மாணவர்களால் எழுதப்பட்ட பகுதிகளிலிருந்து அவர்கள் செய்த பிழைகள் இனம்வாரியாகக் கண்டறியப்பட்டு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

குறில்-நெடில் வேறுபாட்டில் அமைந்த எழுத்துப்பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
பாண்டை	பண்டை	ஆ<அ
வேளிப்படுத்தின	வெளிப்படுத்தின	ஏ<எ
வழ்வின்	வாழ்வின்	அ<ஆ
தெகுத்து	தொகுத்து	எ<ஒ
பிற்கல	பிற்கால	அ<ஆ
பட்டு	பாட்டு	அ<ஆ
படல்கள்	பாடல்கள்	அ<ஆ
கவியம்	காவியம்	அ<ஆ
கப்பியங்கள்	காப்பியங்கள்	அ<ஆ
தோகைநூல்கள்	தொகைநூல்கள்	ஒ<ஒ
புலவார்	புலவர்	ஆ<அ
சோல்லும்	சொல்லும்	ஒ<ஒ
மோழி	மொழி	ஒ<ஒ
பேருமை	பெருமை	ஏ<எ
கலத்தில்	காலத்தில்	அ<ஆ
படால்கள்	பாடல்கள்	அ<ஆ,ஆ<அ
நககுமார காவியம்	நாகுமாரகாவியம்	அ<ஆ
மணிமெகலை	மணிமேகலை	எ<ஏ
சதனை	சாதனை	அ<ஆ

இத்தகைய குறில்-நெடில் அடிப்படையிலான பிழைகளை 50% மாணவர்களே செய்திருந்தனர். எஞ்சிய மாணவர்களுக்கு இத்தகைய பிழைகள் ஏற்படவில்லை.

ல-ள-ழ வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
மொலி	மொழி	ல<ழ
இளக்கியம்	இலக்கியம்	ள<ல
புழுவர்கள்	புலவர்கள்	ழ<ல
நூழ்கள்	நூல்கள்	ழ<ல
தமிலில்	தமிழில்	ல<ழ
அடிகலையுடைய	அடிகளையுடைய	ல<ள
பலமையாக	பழமையான	ல<ழ
பளமையான	பழமையான	ழ<ள
சூலாமணி	சூளாமணி	ல<ள
சூழாமணி	சூளாமணி	ழ<ள
வலையாபதி	வளையாபதி	ல<ள

இத்தகைய பிழைகளை 65% மாணவர்கள் செய்திருந்தனர். எஞ்சிய மாணவர்கள் சரியாகவே எழுதியிருந்தனர்.



ன-ண வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
பன்டை	பண்டை	ன<ண
தணிப்பாடல்கள்	தனிப்பாடல்கள்	ண<ன
உனர்ச்சிகளை	உணர்ச்சிகளை	ன<ண
சாதணை	சாதனை	ண<ன
குன்டலகேசி	குண்டலகேசி	ன<ண
மனிமேகலை	மணிமேகலை	ன<ண
சிந்தாமனி	சிந்தாமணி	ன<ண

மேற்கண்ட பிழைகளை 40% மாணவர்கள் செய்திருந்தனர். ஒரே பிழையை அதிக மாணவர்கள் செய்திருந்தனர்.



ர-ற வேறுபாட்டில் அமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
வேறு	வேரு	ற<ர
அறிய	அரிய	ற<ர
வறலாற்றில்	வரலாற்றில்	ற<ர
பெறுமை	பெருமை	ற<ர
குரைந்த	குறைந்த	ர<ற

இத்தகைய வேறுபாட்டிலானான பிழைகளை 40% மாணவர்கள் செய்திருந்தனர். அனைவருமே ஒரே வகையிலான பிழையைச் செய்திருந்தனர்.

கேட்டெழுதுதல் முறையில் கண்டுணர்ந்த எழுத்துப்பிழைகள் இத்துடன் நிறைவுபெற்றமையால் இனி அதில் இனம்கண்ட சொற்பிழைகளைக் காணலாம்.

5.3.3.2 சொற்பிழைகள்

தமிழில் போதிய மொழியறிவின்மைக் காரணமாகவே இத்தகைய சொற்பிழைகள் ஏற்படும்நிலை ஏற்படுகிறது. இத்தகைய சொற்பிழைகள் கிராமப்புற மாணவர்களின் தரவுகளிலும் காணப்பட்டது. அவை கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
தொத்து	தொகுத்து	Ø<கு
வருமித்தன	வருணித்தன	ம<ன
நெக்கி	நோக்கி	எ<ஓ
அடிகல	அடிகளை	ல<ளை
ஒருவரசு	ஒருவரது	ச<த
குட்டலகேசி	குண்டலகேசி	ட்<ண்
எஸ்சோதர	யசோதர	எஸ்ச்<யச்
ஐபெருகாப்பியம்	ஐம்பெருங்காப்பியம்	Ø<ம்
ஐச்சிறுகாப்பியம்	ஐஞ்சிறுகாப்பியம்	ச்<ஞ்
மேற்றப்பட்ட	மேற்பட்ட	ற<Ø
சலப்பதிகாம்	சிலப்பதிகாரம்	ச<சி
நிலகெசி	நீலகேசி	இ<ஈ,எ<ஏ
அடிகழின்	அடிகளை	ழின்<ளை
தொன்றினார்	தோன்றின	ஒ<ஓ,ஆர்<அ
குறினர்	கூறின	உ<ஊ,அர்<அ
அகினர்	ஆகின	அ<ஆ,அர்<அ
படபேற்றனர்	பாடப்பெற்றன	அ<ஆ,ஏ<எ,அர்<அ
நூல்கல்லக	நூல்களாக	ல்லக<ளாக
செய்ங்கள்	செய்யுள்கள்	ய்ங்<ய்ய்ள்

முதலிய சொற்பிழைகள் மாணவர்களுடைய தரவுகளிலிருந்து எடுத்துக்காட்டப்பட்டன. இப்பிழைகளை 55% மாணவர்கள் செய்திருந்தனர். பிற மாணவர்கள் சரியாகவே எழுதியிருந்தனர்.

5.3.3.3. வாக்கியப்பிழை

ஒரு வாக்கியம் என்பது பல சொற்களைக் கொண்டு அமைந்திருக்கும் என்று முன்னமேயே கண்டோம். இவ்வாக்கிய அமைப்பில் கிராமப்புற மாணர்கள் செய்துள்ள பிழைகள் கண்டறியப்பட்டு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ன:

அப்படல்களைதோகுத்துதோனை நுல்கல்லக பிற்க புளவர் அமத்தனர்	அப்பாடல்களைத்தொகுத்துதொகை நூல்களாகப்பிற்காலப்புலவர்அமைத்தனர்
முலுவரலற்றைசோல்லும் தோடர்நிலை சேய்ங்கள்	முழுவரலாற்றைச்சொல்லும் தாடர்நிலைச் செய்யுள்கள்
பன்டைகலத்தில்குரைந்தஅடிகலிஉடய படால்கள் புழவர்களல் கடப்பெற்றன	பண்டைக்காலத்தில்குறைந்தஅடிகளையுடைய பாடல்கள் புலவர்களால் பாடப்பெற்றன
பத்துப்பற்று நுல்களா ஆகினர்	பத்துப்பாட்டு நூல்கள் ஆயின
வரலற்றை செல்லும் தெடர்நிலை செய்யுர்கள் உருவகினர்	வரலாற்றைச் சொல்லும் தொடர்நிலைச் செய்யுள்கள் உருவாகின
பலக் கணி பாடல் சாடப்பெற்றன	பலத் தனிப்பாடல்கள் பாடப்பெற்றன
பண்டைக்காளத்தின் குரைந்த அடிகழின் யுடைய பழதனி பாடல்கள்	பண்டைக் காலத்தில் குறைந்த அடிகளையுடைய பல தனிப்பாடல்கள்

இத்தகைய வாக்கியப் பிழைகளை 30% மாணவர்களே அதிகளவு பயன்படுத்தியிருந்தனர். பிற மாணவர்கள் எழுத்துப்பிழை மற்றும் சொற்பிழைகள் செய்திருந்தாலும் இவ்வாறு வாக்கியம் முழுமையும் தவறாக எழுதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

5.3.3.4. ஒற்றுப்பிழைகள்

வாக்கியத்திற்குப் பொருள் வழங்குவதில் ஒற்றுக்களுக்கும் பங்குண்டு எனலாம். பிழையாய்வில் எழுத்துக்களோடு இவ்வொற்றுக்களும் ஆயப்படுகின்றன. கிராமப்புற

மாணவர்கள் தங்கள் தரவுகளில் செய்துள்ள ஒற்றுப்பிழைகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

பிழைச்சொல்	திருத்தம்
தமிழ்காப்பியங்கள்	தமிழ்க்காப்பியங்கள்
தொடர்நிலைசெய்யுள்கள்	தொடர்நிலைச் செய்யுள்கள்
பண்டைகாலத்தில்	பண்டைக்காலத்தில்
நிகழ்சி	நிகழ்ச்சி
தனி பாடல்கள்	தனிப்பாடல்கள்
சிலபதிகாரம்	சிலப்பதிகாரம்
பகுதிகளை கூறின	பகுதிகளைக் கூறின
பாடல்களை பாட்டு	பாடல்களைப்பாடு
பத்துபாட்டு	பத்துப்பாட்டு
எட்டுதொகை	எட்டுத்தொகை
வரலாற்றை சொல்லும்	வரலாற்றைச் சொல்லும்

இவ்வொற்றுப்பிழைகளை 40% மாணவர்கள் அதிகமாகவும், 20% மாணவர்கள் குறைவாகவும் செய்திருந்தனர்.

5.3.3.5. நிறுத்தற் குறியீடுகள்

முந்தைய பகுதியில் நிறுத்தற் குறியீடுகளை நகர்ப்புற மாணவர்கள் பயன்படுத்திய முறைகளைக் கண்டோம். இனி இப்பகுதியில் கிராமப்புற மாணவர்கள் இக்குறியீடுகளைப் பயன்படுத்திய பாங்கினைக் காணலாம்.

5.3.3.5.1. காற்புள்ளி

ஆங்கிலத்தில் “Comma” என்று அழைக்கப்படும் காற்புள்ளியின் பங்கு மொழிக்கு மிகவும் அவசியமானதாகும். இத்தகைய குறியீடு இல்லையெனில் மொழியில் சொற்களையோ

வாக்கியங்களையோ தரம்பிரிக்க முடியாது. இத்தகைய குறியீட்டினைக் கிராமப்புற மாணவர்களில் 90% மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்தியிருந்தனர். எஞ்சிய 10% மாணவர்கள் இக்குறியீட்டினை எவ்விடத்திலும் பயன்படுத்தவில்லை.

5.3.3.5.2. அரைப்புள்ளி

"Semi-colan" என்று கூறப்படும் இத்தகைய அரைப்புள்ளி இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சிறிய வாக்கியங்களை ஒரு பெரு வாக்கியங்களின்கீழ் இணைக்கப் பயன்படுகிறது. இக்குறியீட்டினை கிராமப்புற மாணவர்கள் தங்களுடைய தரவில் எங்குமே பயன்படுத்தவில்லை.

5.3.3.5.3. முக்காற்புள்ளி

Colan எனும் பொருளுடைய முக்காற்புள்ளி மாணவர்கள் எழுதிய பகுதியில் இடம்பெறவில்லை.

5.3.3.5.4. முற்றுப்புள்ளி

வாக்கியம் முழுமைப்பெற்றது என்பதை உணர்த்தும் விதமாக அமையும் இக்குறியீட்டினை 95% மாணவர்கள் பயன்படுத்தியிருந்தனர். எஞ்சிய 5% மாணவர்கள் இக்குறியீட்டினைப் பயன்படுத்தவில்லை.

5.3.3.5.5. மேற்கோள் குறியீடு

மாணவர்களால் எழுதப்பட்ட பகுதியில் சில இடங்களில் மேற்கோள் குறியீடுகள் காணப்பட்டன. ஆனால் ஒரு மாணவர்கூட அத்தகைய குறியீட்டினைப் பயன்படுத்தவில்லை.

எட்டுத்தொகை	"எட்டுத்தொகை"
பத்துப்பாட்டு	"பத்துப்பாட்டு"
ஐம்பெருங்காப்பியம்	"ஐம்பெருங்காப்பியம்"

ஐஞ்சிறுகாப்பியம்	"ஐஞ்சிறுகாப்பியம்"

இத்துடன் மாணவர்கள் அவர்களுடைய பாடநூலில் இடம்பெற்ற தமிழ்க்காப்பியம் எனும் தலைப்பிலான பகுதியிலிருந்து ஆய்வாளரால் வாசிக்கப்பட்டு எழுதிய கேட்டெழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகள் இனம்வாரியாகப் பிரிக்கப்பட்டு அவை அட்டவணைப்படுத்தப்பட்டன. இனி மாணவர்கள் தாமாக எழுதிய பகுதியிலிருந்து கண்டறியப்பட்ட பிழைகளைக் காணலாம்.

முழுவதும் சரியாக எழுதியவர்கள்	சிறிது பிழைகளுடன் எழுதியவர்கள்	முழுவதும் பிழையாக எழுதியவர்கள்	ஒன்றுமே எழுதாதவர்கள்
50%	30%	20%	-

5.3.3.3. தாமாக எழுதுதல்

மாணவர்களுடைய மொழித்திறனைக் கண்டறிவதற்காக "தீபாவளி" "பொங்கல்" போன்ற திருவிழாக்கள் பற்றியும், "என்குடும்பம்" எனும் தலைப்பில் அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களின் செயல்பாடு குறித்தும் எழுதச்சொல்லப்பட்டது. இத்தகைய தலைப்புகளில் 70% மாணவர்கள் முழுமையாக எழுதியிருந்தனர். ஒருசில மாணவர்கள் பிழைகளுடன் எழுதியிருந்தாலும் தலைப்பு குறித்த கருத்துக்கள் முழுமைப்படுத்தப்பட்டிருந்தன. எஞ்சிய 30% மாணவர்கள் முழுமைப்படுத்தாமல் சிலவரிகளாலும் பொருளில்லா வார்த்தைகளாலும் முற்றிலும் தவறாக எழுதியிருந்தனர்.

முழுமையாக எழுதியவர்கள்	முற்றிலும் தவறாக எழுதியவர்கள்	ஒன்றுமே எழுதாதவர்கள்
70%	30%	-

இம்முறையில் கண்டறிந்த பிழைகள் இனம்பிரித்து கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

5.3.3.3.1. எழுத்துப்பிழைகள்

இம்முறையிலும் குறில்-நெடில் முதலான எழுத்துப்பிழைகள் கண்டறியப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

குறில்-நெடில் வேறுபாட்டிலமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
தீபவளி	தீபாவளி	அ<ஆ
போங்கல்	பொங்கல்	ஓ<ஒ
கலையில்	காலையில்	அ<ஆ
சப்பிட்டு	சாப்பிட்டு	அ<ஆ
பாண்டிகை	பண்டிகை	ஆ<அ
எதவது	ஏதாவது	எ<ஏ,அ<ஆ
பாட்டாசு	பட்டாசு	ஆ<அ
வங்கி	வாங்கி	அ<ஆ
எல்லவற்றையும்	எல்லாவற்றையும்	அ<ஆ
ஆண்ணன்	அண்ணன்	ஆ<அ
மட்டுப்பொங்கல்	மாட்டுப்பொங்கல்	அ<ஆ
விட்டை	வீட்டை	இ<ஈ
அகியவற்றை	ஆகியவற்றை	அ<ஆ
ரத்திரி	ராத்திரி	அ<ஆ
சமி	சாமி	அ<ஆ
கோளுத்தி	கொளுத்தி	ஓ<ஒ
செல்வொம்	செல்வோம்	ஓ<ஒ
பொட்டுக்கொண்டு	போட்டுக்கொண்டு	ஓ<ஒ
துங்குவோம்	தூங்குவோம்	உ<ஊ
ஏழுந்து	எழுந்து	ஏ<ஏ
விடுவிடாக	வீடுவீடாக	இ<ஈ
குச்சலிட்டு	கூச்சலிட்டு	உ<ஊ

இத்தகைய குறில்-நெடில் வேறுபாட்டில் அமைந்த பிழைகளை 50% மாணவர்கள் செய்திருந்தனர்.

ழ-ள-ல வேறுபாட்டில் அமைந்த பிழைகளிக் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
தீபாவலி	தீபாவளி	ல<ள
பொங்கள்	பொங்கல்	ள<ல
வீட்டிள்	வீட்டில்	ள<ல
அலகாக	அழகாக	ல<ழ
விலையாடுவேன்	விளையாடுவேன்	ல<ள
காளையில்	காலையில்	ள<ல
குலித்து	குளித்து	ல<ள
பல்லிக்கு	பள்ளிக்கு	ல<ள
பழகாரம்	பலகாரம்	ழ<ல
வேளை	வேலை	ள<ல
மஞ்சல்	மஞ்சள்	ல<ள
கழந்துகொள்வோம்	கலந்துகொள்வோம்	ழ<ல
வலையல்	வளையல்	ல<ள
கூழி	கூலி	ழ<ல
அளங்காலம்	அலங்காலம்	ள<ல
கொழுத்துவோம்	கொளுத்துவோம்	ழ<ள
களர்	கலர்	ள<ல
பலம்	பழம்	ல<ழ
சம்பலம்	சம்பளம்	ல<ள
பளகாரம்	பலகாரம்	ள<ல

இத்தகைய வேறுபாட்டிலமைந்த பிழைகளை 40% மாணவர்கள் செய்திருந்தனர்.

ர-ற வேறுபாட்டிலமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
இறவு	இரவு	ற<ர
மருபடியும்	மறுபடியும்	ர<ற
மருநாள்	மறுநாள்	ர<ற

இத்தகைய வேறுபாட்டிலமைந்த பிழையை 20% மாணவர்க செய்திருந்தனர்.

ன-ண-ந வேறுபாட்டிலமைந்த பிழைகளின் அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
என்னெய்	எண்ணெய்	ன<ண
நண்றாக	நன்றாக	ண<ன
துனி	துணி	ன<ண
நன்பர்கள்	நண்பர்கள்	ன<ண
அனிந்து	அணிந்து	ன<ண

இத்தகைய வேறுபாட்டிலமைந்த பிழைகளை 40% மாணவர்கள் செய்திருந்தனர். ஒரே பிழையை ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

மேற்கண்ட எழுத்துப்பிழைகள் 100% மாணவர்களுடைய தரவுகளிலிருந்தும் எடுக்கப்பட்டவையாகும். முழுமையாக எழுதியிருந்த மாணவர்கள் சிறிதளவு பிழைகளுடனும், முழுமையாக எழுதாத மாணவர்கள் அதிகமான பிழைகளுடனும் எழுதியிருந்தனர்.

5.3.3.3.2. சொற்பிழைகள்

தாமாக எழுதும் முறையில் எழுத்துப்பிழைகள் போன்றே சொற்பிழைகளும் அதிகமாகக் காணப்பட்டன. அவை 100% மாணவர்களடைய தரவுகளிலிருந்தும் கண்டறியப்பட்டு கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
திபாவலி	தீபாவளி	இ<ஈ, ல<ள
எந்திரிப்போம்	எழுந்திரிப்போம்	Ø<ழு
எண்ணை	எண்ணெய்	ஐ<எய்
தோய்த்து	தேய்த்து	ஓ<ஏ
எழந்து	எழுந்து	ழ<ழு
செல்வே	செல்வேன்	Ø<ன்
பேய்விட்டு	போய்விட்டு	ஏ<ஓ
வத்து	வைத்து	அ<ஐ
குளிர்த்து	குளித்து	ர்<Ø
கேயில்	கோயில்	ஏ<ஓ
மறுபிடியும்	மறுபடியும்	இ<அ
தப்பிக்கு	தம்பிக்க	ப்<ம்
சொய்வங்கள்	செய்வார்கள்	ஓ<எ, அங்<ஆர்
அங்கையும்	அங்கேயும்	ஐ<ஏ
பேட்டுக்கொள்வேன்	போட்டுக்கொள்வேன்	ஏ<ஓ
பெங்குவர்	பொங்குவர்	எ<ஒ
பெம்மை	பொம்மை	எ<ஒ
அணிஓம்	அணிவோம்	ஓம்<வோம்
செய்ஓம்	செய்வோம்	ஓம்<வோம்
வணங்குஓம்	வணங்குவோம்	ஓம்<வோம்
எத்தன	எத்தனை	அ<ஐ

இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துப்பிழைகளால் ஏற்படும் சொற்பிழைகளை 60% மாணவர்கள் செய்திருந்தனர். ஒரே பிழையை ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் செய்திருந்தனர்.

5.3.3.3.3. வாக்கியப்பிழை

ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களால் ஏற்படும் பிழைகளே வாக்கியப்பிழை எனப்படும். இத்தகைய பிழைகளை முழுமைப்படுத்தாமலும் முற்றிலும் தவறாகவும் எழுதியிருந்த 30% மாணவர்களே செய்திருந்தனர். ஏனைய மாணவர்களுக்கு அத்தகைய வாக்கியப்பிழை ஏற்படவில்லை.

பிழை வாக்கியம்	திருத்த வாக்கியம்
போங்கள் விழாவில் புதுஉடை அனிந்து கோண்டு இருப்பேன்.	பொங்கல் விழாவில் புதுஉடை அணிந்து கொண்டு இருப்பேன்.
கலர் மவை முகற்றில் அப்புவேம்.	கலர் மாவை முகத்தில் பூசுவோம்.
கலையில் எழந்து குலித்து பட்டசு வெடிப்பன்.	காலையில் எழுந்து குளித்து பட்டாசு வெடிப்பேன்.

5.3.3.3.4. வீட்டு வழக்குச் சொற்கள்

பள்ளியில் எவ்வளவுதான் நிலைபெறு மொழியைப் பயின்றாலும் மாணவர்களுக்கு அவர்களுடைய வீட்டில் பேசக்கூடிய வழக்குச்சொற்கள் கலப்பதைத் தவிர்க்க இயலாது. இவ்வழக்குச் சொற்கள் பேச்சில் மட்டுமல்லாது அவர்களுடைய எழுத்திலும் கலந்துவிடுகிறது. மாணவர்கள் தாமாக எழுதிய பகுதிகளில் அவர்களுடைய வீட்டுவழக்குச் சொற்கள் அதிகமாகவே காணப்பட்டது. அவை கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

வீட்டுவழக்குச் சொற்கள்	நிலைபெறு சொற்கள்	மாற்றம்
எந்திரிச்சி	எழுந்து	இரிச்சி<உ
எண்ண	எண்ணெய்	அ<எண்
பலவாரம்	பலகாரம்	வாரம்<காரம்
குளிச்சிட்டு	குளித்துவிட்டு	சிட்டு<த்துவிட்டு
செஞ்சி	செய்து	ஞ்சி<ய்து

மின்னால	முன்னால்	இ<உ, ஆல<ஆல்
போட்டுக்கிட்டு	போட்டுக்கொண்டு	கிட்டு<கொண்டு
பாக்குவோம்	பார்ப்போம்	க்குவோம்<ர்ப்போம்
திம்போம்	தின்போம்	ம்போம்<ன்போம்
போராங்கள்	போகிறார்கள்	ஆங்கள்<றார்கள்
எத்தன	எத்தனை	அ<ஐ

இத்தகைய வீட்டுவழக்குச் சொற்களை 80% மாணவர்கள் முழுமையாகவே பயன்படுத்தியிருந்தனர். எஞ்சிய மாணவர்கள் முற்றிலும் எழுத்துமொழியைக் கொண்டே எழுதியிருந்தனர்.

இதுவரையிலும் மாணவர்களுடைய எழுத்துத்திறனை அறியும்வண்ணம் வினாநிரல், கேட்டெழுதுதல் மற்றும் தாமாக எழுதுதல் முதலியவற்றில் அவர்கள் செய்த பிழைகளை "பிழைஆய்வு" எனும் வகையில் உள்ளடக்கி அவற்றைப் பலவாறாக இனம்பிரித்து கண்டறிந்தோம். இனி அவர்களுடைய வாசிப்புத்திறன் மற்றும் பேசும் திறனை அறிவோம்.

5.3.3.4. வாசிப்புத்திறன்

ஏழாம்வகுப்புத் தமிழ்ப்பாடநூலில் இடம்பெற்றுள்ள சில செய்யுள்பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் மாணவர்களால் வாசிக்கப்பட்டு, அவர்களுடைய வாசித்தல்திறன் சோதிக்கப்பட்டது. அவை ஒலிநாடாவில் பதிவுசெய்யப்பட்டன. இத்தகைய தரவுகள் 100% மாணவர்களிடமும் சேகரிக்கப்பட்டது. தவறாக வாசித்தாலும் பரவாயில்லை என்று அனைத்து மாணவர்களும் எவ்விதத் தயக்கமுமின்றி ஆர்வமுடன் பாடநூலை வாசிப்பதற்கு முன்வந்தனர். அவ்வாறு வாசித்த மாணவர்களுக்கு சில எழுத்துப்பிழைகள் நேரிடலாயின. அப்பிழைகள் கீழே தரப்பட்டுள்ளது.

5.3.3.4.1. எழுத்து உச்சரிப்புப் பிழைகள்

படித்தல், எழுதுதல் முதலான திறன்களை ஓரளவு பெற்றிருக்கும் மாணவர்கள் தமிழில் காணப்படும் எழுத்துவேறுபாடு தெரியாமலேயே படிப்பதிலும் எழுதுவதிலும் அதிகமான எழுத்துப்பிழைகளைச் செய்கின்றனர். பேச்சு வழக்கில் தவறாக உச்சரிப்பதால் எழுதும்பொழுதும் அதே தவறைச் செய்கின்றனர். பாடநூல் வாசித்தலின்போது மாணவர்களுக்கு சில எழுத்துப்பிழைகள் நேர்ந்தன. அவை கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

செய்யுள் பகுதி உச்சரிப்புப் பிழை அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
பலமொலி	பழமொழி	ல<ழ,ல<ழ
பொலிமுகிலாய்	பொழிமுகிலாய்	ல<ழ
அலற்கதிராய்	அழற்கதிராய்	ல<ழ
கொலுங்கொடி	கொழுங்கொடி	ல<ழ
விலுந்த	விழுந்த	ல<ழ
இலங்கு	இழங்கு	ல<ழ
பலம்பிலிந்த	பழம்பிழிந்த	ல<ழ,ல<ழ
கொலுஞ்சாறு	கொழுஞ்சாறு	ல<ழ
பசுந்தலை	பசுந்தழை	ல<ழ
செலுந்திணை	செழுந்திணை	ல<ழ
முலுதாகி	முழுதாகி	ல<ழ

இத்தகைய பிழைகள் 100% மாணவர்களுக்குமே ஏற்படலாயிற்று. தமிழில் உள்ள எழுத்துக்களாகிய ழ-கர, ள-கர, ல-கர வேறுபாடு தெரியாததாலேயே ஏற்படுகிறது. ஒரு மாணவர்கூட இவ்வெழுத்தைச் சரியாக உச்சரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உரைநடைப்பகுதி உச்சரிப்புப் பிழை அட்டவணை

பிழைச்சொல்	திருத்தம்	மாற்றம்
மொலி	மொழி	ல<ழ
மகிலும்	மகிழும்	ல<ழ
மகில்விக்கும்	மகிழ்விக்கும்	ல<ழ
சூலல்	சூழல்	ல<ழ
இகல்ச்சி	இகழ்ச்சி	ல<ழ
தமிலர்	தமிழர்	ல<ழ
கலகம்	கழகம்	ல<ழ
சொற்பொலிவு	சொற்பொழிவு	ல<ழ

உரைநடைப் பகுதியில் வாசிக்கும் பொழுதும் மாணவர்களுக்கு ழ-கர உச்சரிப்பில் பிழை ஏற்பட்டது. பிற வாக்கியங்களைத் திக்கித்திக்கிப் படித்தாலும் சரியாகவே உச்சரித்தனர். இத்தகைய ழ-கர உச்சரிப்புப் பிழை 100% மாணவர்களிடமும் காணப்பட்டது.

5.3.3.5. பேசும் திறன்

மாணவர்களுடைய வாசித்தல்திறனை அறிந்தவுடன் அவர்களுடைய பேசும்திறனும் சோதிக்கப்பட்டது. அப்பொழுது அவர்கள் ஆய்வாளர் கேட்கும் கேள்விகளுக்கு மட்டுமே பதில் கூறிக்கொண்டிருந்தனர். அதுதவிர தாமாக எதையும் பேச முன்வரவில்லை. பிறகு, ஒருவாறாக 40% மாணவர்கள் விளையாட்டுப் பற்றியும் சிறுசிறு கதைகளையும் கூறுவதற்கு முன்வந்தனர். எஞ்சிய 60% மாணவர்கள் வெறெதுவும் பேச முன்வரவில்லை.

5.3.3.6. பொருளுணர்த்திறன்

முந்தைய பகுதியில் குறிப்பிட்டவாறே கிராமப்புற மாணவர்களிடமும் சில செய்யுள் பகுதிகளை (ஆசிரியர் நடத்திய பகுதி) வாசித்துப் பொருள்கூறக் கேட்டபோது எவருமே பொருள்கூறவில்லை. இதிலிருந்து ஒரு மாணவர்க்கு கூட பொருளுணரும் திறன் இல்லை என்பது தெளிவாகிறது.

5.4. முடிவுரை

முந்தைய பகுதியில் குறிப்பிட்டவாறு இப்பகுதியிலும் பெற்றோர் மற்றும் ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளுடன் மாணவர்களுடைய தரவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பிழைஆய்வின் முடிவுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு அவற்றின் விகிதங்களும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

பகுதி-6

மொழிச்சமூகமாக்கத்தில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்கள் - ஓர் ஒப்பீடு

6.0. முன்னுரை

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களுடைய மொழித்திறன்கள் அவர்களுடைய பிழைகளின் அடிப்படையில் பல்வேறு சோதனைகளின்கீழ் முந்தைய பகுதிகளில் தனித்தனியே கண்டறியப்பட்டன. அவ்வாறு கண்டறியப்பட்ட மொழித்திறன்களை ஒப்பிட்டு அதன் முடிவை வெளியிடுவதே இப்பகுதியின் நோக்கமாக அமைகிறது. முதலில் ஆசிரியரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து இத்தகைய ஒப்பீடு தொடங்கப்படுகிறது.

6.1. மாணவர்களின் கல்வி குறித்த கருத்து

பொதுவாக அப்பள்ளி மாணவர்களின் கல்விகுறித்த அவர்களுடைய கருத்தைக் கேட்டபோது இருசார் ஆசிரியர்களுமே ஒரேவிதமான தகவலையே அளித்திருந்தனர். அதாவது,

தொடக்கநிலை மாணவர்களின் கல்விநிலை "பரவாயில்லை" என்றும், நடுநிலையில் பயிலும் மாணவர்களின் கல்விநிலை "நன்றாக உள்ளது" என்றும் கூறியிருந்தனர்.

6.2. பெற்றோரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகள்

பெற்றோரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளில் முதலில் அவர்களுடைய கல்வித்திறன் அறியப்பட்டது. பிறகு பிள்ளைகளின் கல்விகுறித்த கருத்து, அவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தல் முதலான தரவுகள் அறியப்பட்டன. அவை கீழே ஒப்பீடு செய்யப்படுகின்றன.

தந்தையரின் கல்விநிலை அட்டவணை

நிலைகள்	நகர்ப்புறம்	கிராமப்புறம்	வேறுபாடு
ஆரம்பப் பள்ளி (1-5)	68%	30%	38%
நடுநிலைப்பள்ளி (6-8)	17%	11%	6%
உயர்நிலைப்பள்ளி(9-10)	10%	31%	21%
மேல்நிலைப்பள்ளி(11-12)	15%	9%	6%
பட்டப்படிப்பு	-	9%	9%
கல்வியறிவு அற்றவர்	-	10%	10%

தாயரின் கல்விநிலை அட்டவணை

நிலைகள்	நகர்ப்புறம்	கிராமப்புறம்	வேறுபாடு
ஆரம்பப் பள்ளி (1-5)	40%	31%	9%
நடுநிலைப்பள்ளி (6-8)	40%	20%	20%
உயர்நிலைப்பள்ளி(9-10)	20%	18%	2%
மேல்நிலைப்பள்ளி(11-12)	-	2%	2%
பட்டப்படிப்பு	-	-	-

கல்வியறிவு அற்றவர்	-	29%	29%

ஆரம்பப்பள்ளி மற்றும் நடுநிலைக் கல்விநிலையில் நகர்ப்புற பெற்றோர் அதிகமாக இருந்தாலும், உயர்நிலைக்கல்வியில் கிராமப்புற பெற்றோரைக் காட்டிலும் குறைந்த அளவே காணப்படுகின்றனர். குறிப்பாகப் பட்டதாரிகள் எவருமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடைய கல்வித்தகுதிக்கேற்ப தொழிலில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால் பிள்ளைகளின் கல்வியில் தாங்கள் உறுதுணையாக இருக்கமுடிவதில்லை என்பது அவர்களுடைய கருத்தாக அமைகிறது.

கிராமப்புற பெற்றோர்கள் ஆரம்பநிலையில் நகர பெற்றோரைக் காட்டிலும் குறைந்தவர்களாக இருந்தாலும் உயர்நிலைக் கல்வியில் அவர்களைவிட அதிக அளவில் உள்ளனர். குறிப்பாகத் தொழில்அடிப்படையில் சிலர் உயர்ந்த நிலையில் இருக்கின்றனர் என்பதும் தெளிவாகிறது. 9% பட்டதாரி பெற்றோர்கள் இருந்தாலும், 39% பெற்றோர்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், நகரத்தில் கல்வியறிவு அற்றவர்கள் ஒரு சதவிகிதத்தினர் கூட இல்லை என்பதும் தரவுகளின்வழி நிரூபணமாகிறது.

6.2.1. பிள்ளைகளின் கல்விகுறித்த கருத்து

இருசார் பெற்றோரிடமுமே அவர்களுடைய பிள்ளைகளின் கல்விகுறித்த கருத்து கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் **நன்று, சுமார்** என்பதன் அடிப்படையில் பதிலளித்திருந்தனர்.

களங்கள்	நன்று	சுமார்	வேறுபாடு
நகர்ப்புறம்	15%	85%	70%
கிராமப்புறம்	65%	35%	30%

மேற்கண்ட அட்டவணைப்படி நகர்ப்புற மாணவர்களைக் காட்டிலும் கிராமப்புற மாணவர்களே கல்வியறிவில் சிறந்து விளங்குகின்றனர் என்பது தெளிவாகிறது.

6.2.2. பாடம் சொல்லிக்கொடுத்தல்

கல்வியறிவுப் பெற்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பது வழக்கம். அவ்வாறு பாடம் சொல்லிக் கொடுப்பதில் நகர்ப்புறத்தில் 70% பெற்றோரும், கிராமப்புறத்தில் 75% பெற்றோரும் தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். இயலாமைக்கு அவர்கள் கூறும் காரணங்கள் வேலைப்பளு மற்றும் நேரமின்மை என்பதே. இக்காரணங்கள் இவ்விருசார் பெற்றோருக்கும் பொதுவானதாகும்.

பண்புமாதிரிகள்	ஆம்	இல்லை
நகர்ப்புற பெற்றோர்	70%	30%
கிராமப்புற பெற்றோர்	75%	25%

6.2.3. தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தல்

மாணவர்களுக்குத் தற்போது உள்ள பொழுதுபோக்கு அம்சத்தில் முக்கிய இடம் வகிப்பது தொலைக்காட்சி என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தொலைக்காட்சி பார்ப்பதனால் பிள்ளைகளின் படிப்பு வீணாகிறது என்பதில் இவ்விருசார் பெற்றோருமே உறுதியாக இருக்கின்றனர். தொலைக்காட்சிப் பார்ப்பதினால் உலகவிசயங்களும் சில பொதுவான விசயங்களும் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதிலும் இவ்விருசார் பெற்றோர்களுமே நம்பிக்கைக் கொண்டுள்ளனர். அதைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகிறது.

தொலைக்காட்சிப் பார்க்க அனுமதித்தல் அட்டவணை

	அனுமதிப்போம்	அனுமதிக்க மாட்டோம்
நகரம்	20%	80%
கிராமம்	50%	50%

6.2.4. புத்தகம் வாங்குதல்

தங்கள் பிள்ளைகளின் மொழிச்சமூகமாக்கத்திற்கு புத்தகம் மற்றும் நாளிதழ்கள் வாங்குவதற்குக் கிராமப்புற பெற்றோர்களே பெரிதும் ஆதரவு நல்கினர். அதாவது புத்தகம் வாங்கும் பெற்றோர்களாக கிராமப்புற பெற்றோர்களில் 50% பெற்றோர்கள் திகழ்கின்றனர். எஞ்சிய 50% பெற்றோர்கள் அவற்றை வாங்குவதற்குப் போதிய பொருளாதார வசதியில்லை என்று குறிப்பிட்டள்ளனர். ஆனால் நகர்ப்புற பெற்றோர்கள் ஒருவர்கூட தங்கள் பிள்ளைகளுக்காகப் புத்தகம் மற்றும் நாளிதழ் வாங்குவதாகக் குறிப்பிடவில்லை. அதற்கு அவர்கள் கிராமப்புற பெற்றோர்கள் கூறும் காரணத்தையே குறிப்பிட்டுள்ளனர்.

6.2.5. பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த கருத்து

தற்போதைய கல்விநிலை பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உதவும் வகையில் உள்ளதா? என்ற கேள்விக்கு 100% நகர்ப்புற பெற்றோருமே சிறந்தமுறையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் கிராமத்தில் உள்ள பெற்றோர்களில் 60% பெற்றோர்கள் நல்லமுறையில் உள்ளதாகவும், 20% பெற்றோர்கள் தற்போதைய கல்வித்திட்டம் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு உதவிசெய்யாது என்று உறுதியாகக் கூறுகின்றனர். 10% பெற்றோர் சுமாராகத்தான் உள்ளது என்றும் 10% பெற்றோர் எந்தவிதக் கருத்தும் கூறவிரும்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். இத்தகைய விளக்கங்களின் அடிப்படையில் கிராமப்புற பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கல்விநிலையை ஒரு ஆய்வுநோக்கில் பார்ப்பது புலனாகிறது.

இத்துடன் ஆசிரியர் மற்றும் பெற்றோரிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இருசாராருக்கும் இடையிலான ஒப்பீடு செய்யப்பட்டது. இனி இருசார் மாணவர்களின் தரவுகளின் அடிப்படையிலான ஒப்பீட்டினைக் காணலாம்.

6.3. மாணவர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகள்

6.3.1. வினாப்பட்டியலில் கண்டறியப்பட்ட பிழைகளின் ஒப்பீடு

எழுத்துப்பிழைகள்	நகர்ப்புறமாணவர்கள்	கிராமப்புறமாணவர்கள்	வேறுபாடு
குறில் - நெடில்	70%	70%	-
ல – ள – ழ	50%	30%	20%
ர – ற	30%	10%	20%
ந – ன – ண	50%	50%	-
சொற்பிழைகள்	90%	70%	20%

இவ்வட்டவணையின்படி வினாநிரலில் உள்ள பிழைகளைக் கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் நகர்ப்புற மாணவர்களே அதிகஅளவு செய்திருந்தனர்.

6.3.2. கேட்டெழுதுதல் முறையில் கண்டறிந்த பிழைகளின் ஒப்பீடு

பிழைகள்	நகர்ப்புறம்	கிராமப்புறம்	ஒப்பீடு
குறில் - நெடில்	70%	50%	20%
ல – ள – ழ	80%	30%	50%
ர – ற	60%	10%	50%
ந – ன- ண	80%	50%	30%
சொற்பிழைகள்	90%	55%	35%
வாக்கியப்பிழைகள்	40%	30%	10%

ஒற்றுப்பிழை	100%	40%	60%
காற்புள்ளி	75%	10%	65%
அரைப்புள்ளி	100%	100%	-
முற்றுப்புள்ளி	45%	95%	50%
மேற்கோள்	100%	100%	-

மேற்கண்ட அட்டவணையின்படி கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் நகர்ப்புற மாணவர்களே அதிகப் பிழைகளைச் செய்திருந்தனர்.

6.3.3. கேட்டெழுதுதல் முறையில் எழுதிய மாணவர்களின் விழுக்காடு

நகர்ப்புற மாணவர்கள்	கிராமப்புற மாணவர்கள்	ஒப்பீடு
75%	100%	25%

மேற்கண்ட அட்டவணையின்படி கேட்டெழுதுதல் முறையில் எழுதிய மாணவர்களில் நகர்ப்புற மாணவர்களைக் காட்டிலும் கிராமப்புற மாணவர்களே முழுமையாக எழுதியிருந்தது தெரிய முடிகிறது.

6.3.4. தாமாக எழுதுதல் முறையில் கண்டறியப்பட்ட பிழைகளின் ஒப்பீடு

பிழைகள்	நகர மாணவர்கள்	கிராம மாணவர்கள்	ஒப்பீடு
குறில் - நெடில்	80%	50%	30%
ல – ள - ழ	85%	40%	45%
ர – ற	60%	20%	40%
ந – ன - ண	60%	40%	20%
சொற்பிழைகள்	90%	60%	30%
வாக்கியப்பிழைகள்	20%	30%	10%
வீட்டுவழக்குச்சொல்	80%	80%	-

6.3.5. தாமாக எழுதும் முறையில் எழுதிய மாணவர்களின் விழுக்காடு

எழுதிய விவரம்	முழுமையாக எழுதியவர்கள்	பிழைகளுடன் எழுதியவர்கள்	முற்றிலும் தவறாகஎழுதியவர்கள்	ஒன்றுமே எழுதாதவர்கள்
நகர மாணவர்கள்	20%	30%	20%	30%
கிராமமாணவர்கள்	70%	30%	-	-

6.3.6. வாசித்தல் திறனில் ஒப்பீடு

மாணவர்களைப் பாடநூலில் உள்ள செய்யுள் மற்றும் உரைநடைப் பகுதிகளை வாசிக்கச் சொன்னபோது கிராமப்பள்ளியில் 100% மாணவர்களும் நகரப்பள்ளியில் 25% மாணவர்களும் வாசித்தனர். நகரப்பள்ளி மாணவர்களில் எஞ்சிய 75% மாணவர்கள் வாசிப்பதற்குத் தயக்கமும் வாசிப்பதற்குப் போதிய மொழியறிவின்மை உடையவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் கிராமப்பள்ளியில் சில மாணவர்கள் தவறுதலாக வாசித்தாலும் அனைத்து மாணவர்களும் வாசிப்பதற்கு ஆர்வமுடன் காணப்பட்டனர். வாசித்தலின்போது இருசார் மாணவர்களுக்குமே உச்சரிப்புப் பிழை ஏற்படலாயிற்று. குறிப்பாக ழ-கர உச்சரிப்பில் அனைத்து மாணவர்களுமே உச்சரிப்புப் பிழையைச் செய்திருந்தனர்.

6.3.7. பேசும் திறனில் ஒப்பீடு

மாணவர்களிடம் பேசும் திறனைச் சோதிப்பதற்காக அவர்களிடம் ஏதாவது பேசும்படி கேட்கப்பட்டது. அவர்கள் விளையாடும் விளையாட்டுப் பற்றியோ அல்லது ஏதேனும் கதைகளோ கூறக்கேட்டபோது நகர்ப்புற மாணவர்கள் ஒருவர்கூட பேசுவதற்கு முன்வரவில்லை. ஆனால் கிராமப்புற மாணவர்களில் 30% மாணவர்கள் தாங்கள் விளையாடும் விளையாட்டுக்கள் பற்றியும் 10% மாணவர்கள் தங்களுக்குத் தெரிந்த கதைகளையும் கூறினர். இத்தகைய மதிப்பீட்டிலும் நகர்ப்புற மாணவர்களைக் காட்டிலும் கிராமப்புற மாணவர்களே மேலோங்கியிருந்தனர்.

6.3.8. பொருளுணர்த்திறன் திறனில் ஒப்பீடு

மாணவர்களின் வாசித்தல் திறனைப் பரிசோதிக்கும் பொழுது சில செய்யுள் பகுதிகளைப் (குறள்) படித்துப் பொருள் கேட்டபொது இருசார் மாணவர்களுமே பொருளுணர்த்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஒப்பீட்டில் இருசார் மாணவர்களும் ஒத்துப்போகின்றனர்.

6.4. முடிவுரை

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்தை அறியும்பொருட்டு அவர்களுடைய தரவுகளின்வழி மேற்கொள்ளப்பட்ட பிழைஆய்வின் அடிப்படையில் இருசார்மாணவர்களின் பிழைஆய்வு முடிவுகளும் இப்பகுதியில் ஒப்பிடப்பட்டன. அதில் கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் நகர்ப்புற மாணவர்களே அதிக அளவிலான பிழைகளைச் செய்திருந்தனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே நகர்ப்புற மாணவர்களை விட கிராமப்புற மாணவர்களே மொழித்திறனில் மேமம்பட்டு உள்ளனர் என்பது தெளிவாகிறது.

இயல் 7

நிறைவுரை

இவ்வாய்வு, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது. அவற்றில் முதல் இயல் ஆய்வின் அறிமுகம் விளக்கப்பட்டுள்ளது. மொழி மற்றும் மொழிச்சமூகமாக்கம் பற்றிய பெர்ன்ஸ்டைனின் கோட்பாடுகள் குறித்து இரண்டாவது இயலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மூன்றாவது இயலில் மொழிச்சமூகமாக்கம் குறித்த முந்தைய ஆய்வாளர்களின் கொள்கை மற்றும் கோட்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. நான்காவது இயலில் நகர்ப்புற மாணவர்களின் மொழித்திறன்களும் ஐந்தாவது இயலில் கிராமப்புற மாணவர்களின் மொழித்திறன்களும் பரிசோதனைச் செய்யப்பட்டுள்ளன. ஆறாவது இயலில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழித்திறன்கள் ஒப்பிடப்பட்டுள்ளன. இயல் நான்கு மற்றும் ஐந்தில் கள ஆய்வின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழித்திறன்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. அவ்விளக்கங்களின்வழி ஆய்விற்கு எடுத்துக்கொண்ட இருசார் மாணவர்களின் மொழித்திறனைக் கண்டறிதல் எனும் ஆய்வுநோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அறிமுகப் பகுதியில் பரிசோதனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் கருதுகோள்கள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. இக்கருதுகோள்களைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின்வழி பின்வரும் விளக்கங்கள் நமக்குக் கிடைக்கலாகின்றன.

1.மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்தில் அவர்களுடைய மொழியாசிரியர்களும் பங்களிக்கின்றனர்.

2.மாணவர்களின் மொழிச்சமூகமாக்கத்திற்கு அவர்களுடைய பள்ளிச்சூழல் மட்டுமின்றி அவர்களுடைய வீட்டுச்சூழலில் அவர்தம் பெற்றோர்களும் மற்றும் நண்பர்களும் பெரும்பங்காற்றுகின்றனர்.

3. மொழிச்சமூகமாக்கம் வெற்றியடைய மாணவர்களுக்கு அவர்கள் சார்ந்த மொழியில் போதிய மொழியறிவு அவசியம். மொழியில் போதிய அறிவு இல்லையெனில் அம்மொழியில் அவர்கள் அதிகப் பிழைகள் செய்ய நேரிடும். அப்பிழைகள் அவர்களுடைய சமூகமாக்கத்திற்கு இடையூறாக அமையும். மாணவர்களுடைய மொழித்திறனைக் கண்டறிவதில் பிழைஆய்வும்

முக்கியப்பங்கு வகிக்கிறது. எனவே மொழியாசிரியர்கள் மாணவர்களின் மொழித்திறனில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

4.பொதுவாகவே கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் நகரவளர்ச்சியில் வாழும் நகர்ப்புற மாணவர்களே ல் அனைத்து திறன்களிலும் முன்னேற்றமுடையவர்களாயிருப்பர். ஆனால், இவ்வாய்விற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட பண்புமாதிரிகளின் தரவுகளைச் சோதித்தறியும்பொழுது அதற்கு எதிர்மாறான விளக்கங்களே நமக்குக் கிடைக்கின்றன.

5.முற்றிலும் விவசாயத்தையே பிராதனமாகக் கொண்டிருக்கும் கிராமச்சூழலில் வாழும் மாணவர்கள் அனைத்து திறன்களிலும் நகர்ப்புற மாணவர்களைக் காட்டிலும் சற்று மேம்பட்டவர்களாகவே திகழ்கின்றனர்.

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம் குறித்த இவ்வாய்வு ஒரு தொடக்கக்கட்ட ஆய்வாகும். இவ்வாய்வு இனிவரும் அய்வுகளுக்கு ஓர் முன்னோடி ஆய்வாகவும் அமைகிறது. இவ்வாய்வின் மூலம் விளக்கப்பட்ட கருத்துக்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களின் மொழிச்சமூகமாக்கம் குறித்த விளக்கங்களை நமக்கு அளிப்பதாக அமைகிறது. இவ்வாய்வின் மூலம் வெளிப்பட்ட கருத்துக்கள் இதற்கு முன் செய்யப்பட்ட ஆய்வுகளின் கோட்பாடுகளை மறு பரிசோதனை செய்வதாகவும் அமைகிறது.

துணைநூற்பட்டியல்

Barnes, D. (1971). "Language in the secondary class room", in Language, The learner and the school. (Ed.) D. Barnes, J.Britton and, H. Rosen. London: Harmondsworth.

Bernstein (1969). A Sociolinguistics in Communication and Socialization, Language and Education, Vol.I London: University on London.

Bernstein, Basil and Henderson, D. (1969) . Social class difference in the relevance of language to socialization.

Berstein, Basil . (1967) . "Elaborated and restricted codes; Their social origins and some consequence's in Explorations in Sociolinguistics (Ed.) Stanley Lieberson, The Hague, Moution. pp.126.33

Berieter, C. and Engleman . (1966). An academically oriented pre-school for culturally deprived children' in pre-sschool education to-day (Ed.) F. Hechinger, Newyork: Double-day.

Labov. William. (1970). 'The Study of Language in its Social Context' in Studdium Generale, Vol. 23, pp. 66-84.

Malinowski, D. (1956). 'The Problem of Meaning in primitive languages' in The meaning of meaning (Ed.) Ogden, C.K. and Richardss, I.A. London: Routtledge and Kegan paul.

Sapir, E. (1929). 'The status of linguistics as a science' Language, 5, 207-214.

Suresh , J. Language Socialization of Scheduled castes Children in India TamilNadu a Case Study. Monograph No.9, New Delhi; Language Division, office of the Registrar General, India.

Rajendran , S. . Language Socialization of Scheduled castes Children: Case Studies in Tamilnadu and Kerala. Tamil Civilization vol. 14-18, 79-89, 1996- Dec. 2000.

Rangan, K. and Jayakumar,M. 1988. A Pilot Study on the Impact of spoken Children. Reported submitted to Indian council of Social Science Research, New Delhi, Tamil University, Thanjavur.

தமிழகத் தமிழாசிரியர் கழகம், பெரியார் மாவட்டக் கிளை, ஈரோடு .தமிழ்ப் பாடநூல் ஆய்வு (தொகுப்பு)